உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ௰௫ { பிரமாதி, தை } மலர் ௰

க.	போங்கல் வாழ்த்து திரு. ந. சிவகுருநாதபிள்ளை அவர்கள் திரு. பு. வே. தேவாரசமுதலியார் அவர்கள்	373
உ.	செவியறிவுறூஉ திரு. த. வே. உமாமகேசுவரன் அவர்கள்	374
௩.	மெய்ப்பாட்டியல் திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M.A., B.L.	377
ச.	கம்பரும் மக்கள் இயல்பும் திரு. T. K. சிதம்பரநாதமுதலியார் அவர்கள் B.A., B.L.	385
ரு.	வள்ளல் கண்டீரக்கோப் பெருநள்ளி (நாடகம்) திரு. சிவ. குப்புசாமி அவர்கள்	390
சு.	வினையுணர்வும் ஞானசம்பந்தரும் திரு. ஔவை. சு. துரைசாமிபிள்ளை அவர்கள்	397
எ.	கலைச்சொற்கள் திரு. T. S. வேலாயுதம்பிள்ளை அவர்கள் B.A., L.T.	404
அ.	தமிழ்ச்செய்திகள்	410
கூ.	புத்தக மதிப்புரை	412
௰.	நன்கொடைகள் பொழிற்றொண்டர்	413

பொழிற்றொண்டர்:
செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௫ | பிரமாதி, தை | மலர் ௰

உ

பொங்கல் வாழ்த்து

க மங்கல வைகலாய் மாதத் தோற்றமாய்த்
தங்கிய துன்பெலாம் தளரும் நாளதாய்ப்
பொங்கொளிப் பகலவற் போற்றும் பொங்கல்நாள்
எங்கணு மின்புற எழிலுற் றோங்கவே

உ இத்திரு நாளினில் இறைவற் போற்றியும்
பத்தியிற் சிறந்துளோர் பாதம் ஏத்தியும்
எத்திறத் துயிர்கட்கும் இன்பமே செய்தும்
சத்திய சீலராய்த் தங்கி வாழ்துமே

ங தண்டமிழ்த் தாயினைச் சைவப் பேற்றினை
வெண்டிரு நீற்றினை விளங்கு கண்டியை
அண்டரு மறிவரும் அருண்மெய்ந் நூலினைப்
பண்புறப் போற்றியே பயன்கொள் வாமரோ.

ந. சிவதுருநாதபிள்ளை, சித்தாந்த ஆசிரியர், தூத்துக்குடி

பருமுத் தரிசி தனையாய்ந்து
பசுந்தே னதனை வடித்தெடுத்துப்
பவழக் குடத்தி லுலையேற்றிப்
பரிவு தரும்பாற் சோறாக்கி
ஒருமைப் படியே பூந்தளிரை
ஒன்றாய்ப் பறித்துக் கறிசமைத்தே
உண்ணும் படிக்கிங் குபசரிக்கும்
உரிமைப் பருவத் திளங்கோதைப்

பெருமை மடவார் நாங்களின்று
பிரியத் தடனே வெண்பளிங்காற்
பிரிய வகைக்குக் கட்டுவித்த
பெரிய மனையெம் மனையுன்றன்
அருமைச் சிறுகிண் கிணிக்காலால்
ஐயா சிற்றி லழியேலே!
அமலா! பழனிச் சிவகிரிவாழ்
அரசே! சிற்றி லழியேலே!

வைத்தியரத்நம், பு. வே. தேவராஜ முதலியார் திருப்பாதிரிப்புலியூர்.

தமிழ்த்தாய் வாழ்க

செவியறிவுறூஉ

அமிழ்தினுமினிய தமிழ்மொழி வழங்கும் இமிழ்திரைக் கடல்சூழ் தமிழகத்துள்ளீர்!

எங்கும் இன்பம் பொங்கித் துளும்பும் பொங்கற் புது நாள் தமிழ் நினைவூட்டும் தண்டமிழ் நன்னாளன்றோ? இந் நன்னாளில் நீவிரெல்லீரும் ஒக்கலோடிருந்து மிக்க சோறுண்டு உளமிக மகிழ்ந்து களிக்கின்றீரன்றோ? இக்களிப்புநாளில் நம் தமிழன்னையை, நந்தா ஒளியுடைச் செந்தமிழன்னையை நீவிர் நினைந்து ஏத்திப் போற்றுவதுண்டோ? தாய்க்கடன் நினைந்து பணியாற்று மக்களுமுளரோ? எந்நாட்டில் தாய்மொழிப்பற்று ஒரு தனிப்பற்றாய்த் தழைத்து நிற்கின்றதோ அந்நாடே எந் நாட்டினும் மிக்குயர் பொன்னாடென ஆன்றோர் அறிவுறுத்திச் சென்றனர். அம்முறையில் நம்நாட்டின் நிலைமை என்ன?

தமிழ்நாடும் தமிழ்மொழியும்

தமிழ்நாட்டில் தமிழ்ஒளிபரப்பும் கல்லூரிகள் யாண்டு யாண்டுள்ளன? அக்கல்லூரிகளிற் பயின்று எத்துணை மாண வர்கள் யாண்டுதோறும் தேர்ச்சிபெற்று வெளிவருகின்றனர்? மொழிக்காக விருந்தமைந்த முறையில் தமிழன்னைக்கு அணி செய்யக் கூடியனவாய் எத்துணைச் சிறந்த தமிழ்நூல்கள் யாண்டு தோறும் வெளியிடப்படுகின்றன? "பன்னருங்கலைதெரி பட்டி மண்டபங்கள்" பல நிலவிய தமிழ்நாட்டையும், கந்தனையனையவர் கலைபயில் கழகங்கள் நிலவிய செந்தமிழ் நாட்டையும் உங்கள் அகக்கண் முன்னே நிறுத்திக்கொண்டு, சங்க காலத்திற்குச்

செல்லுங்கள். அக்காலத்தில் சங்கத்தில் ஒருங்கு கூடித் தமிழாராய்ந்த புலவர்கள் எண்ணிக்கையையும், உயர்நிலைப் பள்ளிகளும் பல்கலைக் கழகங்களும் மல்கி இருந்தும், இக்காலத் தமிழ் நாட்டில் சங்கப் புலவர்களை ஒத்த புலவர்களின் எண்ணிக்கையையும் எண்ணிப்பாருங்கள். அற்றைஞான்றிருந்த புலவர்களைவிட இற்றைஞான்று யாம் மிக்க புலவர்களைத் தமிழ்நாட்டிற் காண்கின்றோமா? இல்லையே! காரணமென்னை? தமிழரின் அயர்ச்சியும் உறக்கமும் அன்றோ? சென்றது போக; நம் தமிழன்னை மீண்டும் வீறுபெற்று அரியணை ஏறி முடிதாங்கிச் செங்கோலோச்சித் திகழவேண்டின் நீவிர் நும்செய்கடன் அறிந்து பணியாற்ற வேண்டாவோ? கூட்டங்கள் கூட்டித் "தமிழ் உயர்தனிச் செம்மொழி"யெனப் பேசிவிட்டால் தமிழ் உயர்ந்துவிடுமோ? தமிழ்ப் புலவர்கள் மிகுந்தாலன்றோ தமிழ் உயரும். புதுவது புனைந்த புத்துயிர் நூல்கள் வெளிவந்தாலன்றோ தமிழ் உயரும். புலவர்களைப் பேணி உயர்நிலைக்கண் செல்லவிட நிலைக்களனாயிருந்து பணியாற்றும் எம்சங்கத்திற்கு நீவிர்புரிந்த உதவிதான் என்னையோ? புலவர்களைப்போற்றி ஆயிரக்கணக்கான பொற்காசுகளை அள்ளி இறைத்து அவர்கள் உளங்குளிர என்புங் குளிர தமிழ்ப்பெரு வள்ளல்கள், தமிழ்ப் பேரரசர்கள் ஈந் தணைத்த தாலன்றோ இன்று எந்தமிழ்மொழியில் எண்ணற்ற நூல்கள் நின்று நிலவித் தமிழகத்தை அணிசெய்கின்றன. இந்நூல்களின் ஏற்றத்தை உணர்ந்த எம்மொழிவல்லுநரும் இம்மொழி இணையில் மொழியென நம் மொழியைப் போற்றுகின்றனர். ஒருநூலுக்குப் பதினாறுநூறாயிரம் பொன்னை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன்னரேயே வாரிக்கொடுத்து 'பட்டினப்பாலை' எனும் அப்பண்பார் நூலைக்கொண்டு புலவர்களை ஊக்கிய திருமாவளவன் வாழ்ந்த வண்டமிழ்நாட்டின் தாய்மொழிப்பற்று இன்று தமிழகத்தினின்றும் யாண்டொளிந்தது? அத்தகு சிறப்புடை மன்னர்களையும், வள்ளல்களையும் போன்று வாரிக்கொடுக்க வண்பொருள் இல்லையாயினும் தமிழகத்திற்பிறந்த நீவிர் உம்மாலியன்ற ஒருதுளி உதவியைத் தமிழ்மொழி வளர்ச்சிக்குச் செய்யவேண்டாவோ? பல துளி பெருவெள்ளமன்றோ? பல கற்கள் பொருந்தியன்றோ பெருந்தளியாகின்றது.

நுங்கடமையை உணர்ந்து தமிழாக்கத்திற்கு உதவி புரிமின்! தனிக்கை தட்டின் பேரொலி எழும்புமோ? தமிழாக்கங் கருதி உண்மைப் பணியாற்றும் எம் **கரந்தைத் தமிழ்ச்சங்கம்**

தனித்தமிழைத் தகவுடன் போற்றிவருவதை நீவிர் நன்கு அறிந்துள்ளீர்! நம்மொழி நலம்பேண பேரவாக்கொண்டு புலவர் கல்லூரியை வைப்புமுதல் (Fund) இன்றியே தோற்றுவித்து எம் சங்கம் நடத்தி வருகின்றது. தனித் தனியே மொழி வளர்ச்சிக்கு முயல்வோர் யாவரும் எஞ்சங்கத்தோடிணைந்து உழைத்தால் தாய்மொழி ஏற்றங் கண்டு ஒருங்கு களிக்கலாம் என யாம் சாற்றவும் வேண்டுமோ? ஒல்லும் வகையால் உதவ எண்ணுமின்!

மொழியே உயிரெனும் முதற்குடிப் பிறந்தீர்!

வங்கநாட்டினர் தர்ய்மொழிப் பற்றின் வன்மையை நீவிர் உணர்மின்! ஆந்திரர்தம் தாய்மொழிப் பற்றை ஆய்ந்தறிமின். அவர் மொழிப்பற்றும் அவர்தம் ஆற்றலுங்கண்டு அவரைப் போற்றுதாருளரோ? அவர்தம் உலைவில் முயற்சியால் தத்தம் தாய்மொழிக்குத் தனித்தனிப் பல்கலைக்கழகங் கண்டிருக்கின் றனரே! நம் தமிழ்நாட்டில் நம்மொழிக்கெனப் பல்கலைக்கழகங் காண யாம் முயன்றேமா? பிறமொழிகளுக்கு எத்துணையோ உயர்நிலைப் பள்ளிகளும் கலைக்கழகங்களும் நம்நாட்டில் நிலவுகின் றனவே! அம்மொழியாளர்களைக் கண்டு யாம் நாணமடைய வேண்டாவோ? அரசியல் தேர்தல் எனின் சிறுபதவிக்கும் அள வற்ற பொருள்களை அள்ளியிறைக்கும் தமிழ்நாட்டுச் செல்வர் களே! ஆய்ந்துணர்மின்! ஆவனசெய்மின்!! தாயைப்போற்று தார் தாய்நாட்டிற்கு எவ்வாற்றுற் பணிபுரிவர்? தாய்மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்றெனத் தகவுடன் அறிமின். தமிழ் மொழி பிறமொழிச் சொற்களால் நெருக்குண்டு பீடழிவதை உணர்மின்! மொழித்தூய்மையே அம்மொழிபேசும் மக்களின் தூய்மையும் வாழ்வும் என்பதை உணர்ந்து பணிசெய்மின்! பொங்கற் புது நாளாகிய இன்று தாய்த் திறையாக ஒல்லும் பொருள் தந்து உதவுமின்! தாய்மொழியைப் போற்றிஅவள் தண் ணருள்பெற எஞ்சங்கத்தோ டியைந்து பணிபுரியவம்மின்! தமிழ் தழைத்தோங்க, தமிழ்க்கலை யோங்க, தமிழர் வீறுபெற்றுயர, ஓயாது உழைக்க வம்மின்! வம்மின்!! எனச்செவியறிவுறீஇ உங்களை வருந்தியழைக்கும்,

வண்டமிழ்த்தொண்டன்,

த. வே. உமாமகேசுவரன்.

மெய்ப்பாட்டியல்

திருவாளர், S. சோமசுந்தரபாரதியார் அவர்கள் M. A., B. L.,
பசுமலை

(முற்றொடர்ச்சி, துணர்: 15, மலர்: 9, இதழ்: 336)

சூத்திரம் 12

ஆங்கவை யொருபா லாக வொருபா
லுடைமை யின்புற னடுவுநிலை யருள
றன்மை யடக்கம் வரைத லன்பே ணுஅக்
கைம்மிக னலிதல் சூழ்ச்சி வாழ்த்த
ணுணுத றுஞ்ச லரற்றுக் கனவெனுஅ
முனித னினைதல் வெரூஉதன் மடிமை
கருத லாராய்ச்சி விரைவுயிர்ப் பெனுஅக்
கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொறாமை
வியர்த்த லைய மிகைநடுக் கெனுஅ
விவையு முளவே யவையலங் கடையே

கருத்து :—இதுவரை முதற்சூத்திரங் கூறும் எண்ணான் குணர்வாமெய்ப்பாட்டு வகை விரித்து, இதில் முன் இரண்டாம் சூத்திரம் சுட்டிய நாவிரண்டாகும் பான்மையதாம் செய்யுட் பொருள் சிறக்கவரும் உள்ளுணர்வுகள் குறிக்கப்படுகின்றன.

பொருள் :—ஆங்கவை ஒருபாலாக ஒருபால்=இதற்குமுன் "நகையே........எட்டு" என்பது முதல் "செல்வம் புலனே........ உவகை நான்கே" என்பது வரை சூத்திரங்களில் கூறப்பட்ட மெய்ப்பாட்டுணர்வுகள் ஒருபான்மையவாக, மற்றொருமெற்றிய வாய்; "உடைமை....நடுக்கெனுஅ இவையுமுளவே=உடைமை முதல்நடுக்கு வரை எவ்வெட்டாய் எண்ணப்படு முணர்வுகளும் செய்யுட் பொருள் சிறக்க வருவனவுள; அவையலங்கடையே= இவை உளவாதல் முன்குறித்த மெய்ப்பாடு எட்டன்வகை தோன்று விடத்தாம்.

குறிப்பு :—இதில் கூறப்பெறும் உணர்வு முப்பத்திரண்டும், 'எனுஅ'எனும்அளபெடைஇடைச்சொற்களால்எவ்வெட்டாய்ப் பிரித்து எண்ணப்படுதலால், இவை முதலிற் குறித்த நானான் காய்ப் பண்ணைத் தோன்றும் மெய்ப்பாடு எட்டன் வகைகளின் வேறுதல் வெளிப்படை. அன்றியும், நானான்காய்த் தொகுத்து

முன் எட்டு மெய்ப்பாட்டு வகையெனச்சுட்டிய எண்ணான் குணர்வும் புறத்தே மெய்யிற்றோன்றுந் தன்மையவாதல் "கண்ணியபுறனே நானான்கேன்ப" என முதற்சூத்திரத்தும், "அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப" எனத்தேற்றத்துடன் மூன்றாஞ் சூத்திரத்தும் வற்புறுத்தப் பெறுதலால் தெளிவாகும். அதனாலும் அப்பான்மைசுட்டி அவற்றை ஆங்கவை ஒருபாலாக எனப் பிரித்து நிறுத்தி வேறு "ஒருபால்" எனத்தொடங்கி எவ்வெட்டாய் வகுத்து இச்சூத்திரத்தெண்ணப்பெறும் உணர்வு முப்பத்திரண்டும் புறக்குறிச் சுட்டின்றி வாளா கூறப்பெறுதலானும், நகை முதலிய குறிபெறும் பான்மைய மெய்ப்பாடு எட்டே எனக் குறித்து விலக்கியதாலும், இவை நாலெட்டும் எண்ணான்கு மெய்ப்பாட்டு வகைகளின் வேறாய்ச் செய்யுட் பொருள் சிறக்க வரும் உணர்வுகளே யாதல் தேற்றமாகும். இப்பான்மை வேறுபாடு விளங்க இச்சூத்திரத் துவக்கத்திலும் இவ்வுணர்வுகளேஎண்ணத்தொடங்குமுன் "ஆங்கவைஒருபாலாக, ஒருபால்" என நிறுத்த சொற்பெய்த குறிப்பு மறிக.

இனி, இவ்வாறு எண்ணான்கும், நாலெட்டுமாய் வகை பெறலொன்று, புறக்குறிச் சார்புடைமையுமின்மை ஒன்று ஆக இவ்விருதிற வேறுபாடேயுமன்றி, இவற்றிடை இன்னுமொரு தன்மைத் திரிபு முளது. மெய்ப்பாட்டு வகை எண்ணான்கும் அகப்புறப்பொருட் பகுதிகளிரண்டற்கு மொப்ப வருபவை. இதிற் குறிக்கும் உணர்வு வகைநாலெட்டும் அகத்துறைகளுக்குச் சிறப்புரிமை பெறுவன. இவை எவ்வெட்டாய் முறையே "இயற்கைப் புணர்ச்சியும், இடந்தலைப்பாடும், பாங்கொடு தழாஅலும், தோழியிற் புணர்வு மென்றாங் கந்நால் வகையினுமடைந்த சார்பொடு" கண்ணிய வகை நான்கெனத் தொகுக்கப் பட்டன.

இனி, உடைமை என்பது பொருண்மை. அஃதாவதுமதிப்பு உரிமைப் பெற்றியாகும். மதிக்கப்படுவதே பொருளாகும், "பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்" என்பது காண்க. இனி ஒருவர் மற்றவர்க்குப் பொருளாதல் காதலின் முதற்படி, காதற்றலைவனைத் தலைவிக்குக் கிழவன் எனவும், தலைவியைத் தலைவனுக்குக் கிழத்தி யெனவும் சொல்லும் மரபு இப்பொருட்டாதலறிக, 'பிறன்பொருளாள்' என மனைவியை உடைமைப் பொருளாகக் கூறியதும், உரிமை என்றே பெட்ட மனைவிமார் அழைக்கப்பெறுவதும், "யானுன் உடைமை" எனக்காதலர்தம்முள் வழங்குவதும், இந்நயம் கருதியேயாம். எனவே அன்பின்

வழித்தாம் உரிமையுணர்வே உடைமையாகும். இன்புறல், அக்கிழமையுணர்வால் விளையுமகிழ்வாகும். நடுவுநிலை, காதலுங் கடனும்மோத ஒருங்கோடா மனச்செப்பம்; விழைவடிமையாகாது அறமறவாக் காதற்செவ்வி. நடுவுநிலை ஈண்டுச் சமநிலை எனும் சுவை சுட்டாது; தனை மறக்கும் கற்புக் காதலின் உணர்வையே குறிக்கும். அருள், தவறுணரா அன்பின்பெருக்கம். "காணுங் கால்காணேன் தவறாய" என்பதறிக. தன்மை, தானதுவாகுமியல்பு; நோக்குவ எல்லாமவையே போறல் எனும் மனமாட்சி. அடக்கம் = தலைமைநிலை மறந்து மனமொழிமெய்யினடங்குதல். ஞாட்பினுணண்ணாரும் உட்குமென் பீடு ஒண்ணுதற் கோஒ உடைந்தது" எனவும், "நாணொடு நல்லாண்மை (காதலுக்கு முன்) பண்டுடையேன்" எனவும் வருவனவற்றால் அன்படக்கம் தருதலறிக. வரைதல், நாணுவரை யிறத்தலும், முன்உவந்த பலவும்வெறுத்து விலக்கலுமாயமனநிலை; இது காதலினெழுவது. அன்பென்பது அருட்கு முதலாகி மனத்தின்கண் நிகழ்வது. இவை எட்டும் காதலின் முதனிலையா மியற்கைப்புணர்வொடு தொடர்வன.

கைம்மிகல் = அடங்காக் காதற்பெருக்கு. "நோய்மலி நெஞ்சமோடு இனையள் தோழி" என்பதும் "ஆற்றல் (காதல்) நோயட இவளணி வாட" முன் என்பதும் போல வருவன காண்க. "காதல்கைம்மிகல்" எனக்களவியலினும் (சூ. 115) முன் இவ்வியலிலும் (23-ஆம் சூத்திரம்) சுட்டுவதானுமுணர்க. நலிதல் = மெலிவு, அஃதாவது வலிஅழிவு. சூழ்ச்சி = காதல் கைகூடாவழி யாராய்தல். வாழ்த்தல் = காதலால் நெஞ்சையும் பிறவற்றையும் வாழ்த்துதல். "வாழி என்னெஞ்சே", "நீவாழி பொழுது", "வாழி அனிச்சமே", "காதலை வாழிமதி", "புன்கணை வாழி மருண்மாலை" எனவருவன காண்க. நாணுதல், உட்குதல்; "காமமும் நாணும் உயிர்காவாத்தூங்கும் என்நோனா உடம்பினகத்து" எனவும் "பல்லோர்கூற யாம்நாணுதுஞ் சிறிதே" எனவும் "யானோக்குங் காலை நிலனோக்கும்" எனவும் "கொண்க னூர்ந்த கொடிஞ்சி நெடுந்தேர்..................காணவந்து நாணப்பெயரும்" எனவும் வருவன காண்க. துஞ்சல், காதற் கனவுறவுறங்கல். "கயலுண்கண் யானிரப்பத்துஞ்சில்" எனவும், "துஞ்சுங்காற்றோண் மேலராகி" எனவும், "கனவினாற் காதலற் காணாதவர்" எனவும் வருபவை கண்டறிக. அரற்றல், வாய்விடல். "நெஞ்சநடுக்குற" எனும் பாலைக்கலியில் "பாயல் கொண்டென்றோட் கனவுவார்,

ஆய் கோற்றொடி நிரை முன்கையள். கையாறு கொள்ளாள், கடிமனை காத்தோம்ப வல்லுநள் கொல்லோ? என்றூராயிழாய்'' எனவருதலின் தலைவன் ஆராற்றினமை காண்க. கனு, இதுவும் காதலிற்கனிவது. "நுண்பூண்மடந்தையைத் தந்தாய் போல இன்றுயில் எடுப்புதி கனவே'' (குறுந். 147) எனத் தலைவன் கனவலும், "நனவினு னல்காக்கொடியார் கனவினுல், என் எம்மைப் பீழிப்பது?'' எனத் தலைவி கனவலும் அறிக. இவ் வெட்டும், இடந் தலைப்பாடெனுமிரண்டாம் காதனிலைக்குச் சிறந்துரியவாம்.

இனி, முனிதல் முதல் உயிர்ப்புவரையுள்ள எட்டும் 'பாங்கொடு தழாஅல்'எனும் மூன்றுங் காதல்நிலைக்குரிய. அவை வருமாறு:—முனிதல்—முன்விரும்பிய வெறுத்தல். "பாலு முண்ணாள் பந்துடன் மேவாள்'' எனுங் கயமனர் குறும்பாட்டா லறிக. நினைதல், விருப்புற்றுநினைத்தல், "நினைப்பவர் போன்று நினையார் கொல்'' எனவும் "உள்ளாதிருப்பினென் அளவைத் தன்றே'' எனவும் தலைவியும் 'நினைந்தனல்லனோ பெரிதே''எனத் தலைவனும் நினைத்தல் காண்க. (குறுந். 99, 102) "......... பெரிதழிங்தெனவ! கேளாய், நினையினை நீ நனி'' எனவரும் நற்றிணை(253ம்) செய்யுளுமிதுவேயாம்.

வெரூஉதல்=பிரிவும் ஊறும் அஞ்சுதல். "அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்பிரிவோரிடத்துண்மையால்'' என்பதிலும்யாம்தவறுசெய்யினும்,"பிரிவாங்கஞ்சித்தணப்பருங் காமம் தண்டியோரே'' என்னுங் குறும்பாட்டிலும் (177) "நீயே, அஞ்சல் என்ற என் சொல்லஞ்சலையே'' என்னும் சிறைக்குடி ஆந்தையார் (300) செய்யுளினும் பிரிவச்சம் கூறுதலும் "இரவு நீ வருதலின்,ஊறும்அஞ்சுவல்,''(குறுங்.217) எனவும் 'உள்ளினும் பனிக்கும் ஒள்ளிழைக் குறுமகள்' (நற். 253) எனவும் ஊறச்சம் கூறுதலும் உணர்க. மடிமை=ஆற்றாமையின் அயர்வு. இதனை "விளையாடாயமொ டயர்வோ ளினியே'' எனவும் "ஆய்வளை நெகிழவும் அயர்வு மெய்ந்நிறுப்பவும், நோய்மலி வருத்தம் அன்னையறியின்'' எனவும் வரும் (குறுங். 396, 316) குறும்பாட்டடிகளானறிக. கருதல் குறிப்பு. "நாட்டமிரண்டும் அறிவுடம்படுத்தற்குக் கூட்டியுரைக்குங் குறிப்புரையாகும்''. "குறிப்பே குறித்தது கொள்ளுமாயின்'' எனுங் களவியற் சூத்திரங்களானுமிக் கருத்துண்மை தேர்க. "செறாஅச்சிறு சொல்லும், செற்றார் போனோக்கும் உறாஅர்போன் றுற்றார் குறிப்பு'' (குறள் 1097.) "வைகல் தோறும் நிறம் பெயர்ந்

துறையுமவன் பைதல் நோக்கம் நினையாய்தொழி....பிறிதொன்று குறித்தவன் நெடும்புறநிலையே (குறுந். செய் 298) என்பதனு லறிக. ஆராய்ச்சி, கூட்டம் பெறும்வழிச் சூழ்தல். "மகிழ்நன் மார்பே வெய்யை யால், நீ அழியல், வாழிதோழி....வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே" (குறுந்.73)எனவும், அவரொடு சேய்நாட்டு........பெருங்களிற்றடிவழி நிலைஇயநீரே உணலாய்ந் திசினல்" எனவும் காதல்பற்றி ஆராய்ச்சி நிகழ்தலறிக.

விரைவு, வேகம், ஆர்வ மிகுதியாலெழுவது. "மாலைவாரா வளவைக் காலியற் கடுமாக் கடவுமதி, பாக! ....உண்கட் தெரி தீங்கிளவி (யோள்) தெருமரல் உயவே"....(குறுந் 250) "காலியற் செலவின் மாலை எய்திச், சின்னிரை வால்வளைக் குறு மகள், பன்மாணுக மணந்துவக் குவமே" (குறுந் 289) என்ப வற்றான் காதலின் வேகம் கண்டு தெளிக. உயிர்ப்பு, ஆனுக் காதலின்நெட்டுயிர்த்தல்."பாணுள்பள்ளியானையின் உயிர்த்தென்- உள்ளம் பின்னும் தன்னுழையதுவே" (குறுந் 142) எனத் தலை வனும், "பள்ளியானையின்உயிர்த்தனன் நசையில்புதல்வர்த்தழீஇ இயினன்" (குறுந் 359) "பள்ளியானையின் வெய்ய உயிரினை" (நற் 253) எனத்தோழியும் கூடாக்காதலின் நீடுயிர்ப்புறுதல் குறிக்கப் பெறுதலறிக.

இனிக் காதலின் நான்கா நிலைக்குரிய எட்டும் வருமாறு:— கையாறு=வயனழிவு, அல்லது செயலறவு; இதுவும் கடந்த காதனிலையான் வருவது. இதனை, "பிரிந்தோர் கையற நாலும் நள்ளென் யாமம்" எனவும் (குறுந் 160) "பிரிந்தோர் கையற வந்த பையுள் மாலை" எனவும் (குறுந் 391) "காலைவருந்துங் கையாறு" எனவும் (குறுந் 48) வருவனவற்றாலறிக. இடுக்கண் =காதலர் வருந்தும் துன்பம்.

"யாமெங் காதலர்க் காணே மாயிற்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே" (குறுந். 290)

எனவும்,

"நாமில மாகுத லறிது மன்னே
வில்லெறி மஞ்சி போல..................
..............சேர்ப்பனொடு நகாஅ வூங்கே" (நற். 299) எனவும்

" ....இனே பெரி துழக்கும்
நன்னுதல் பசலே நீங்க, அன்ன
நசையாகு பண்பி னொரு சொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே" (குறுந். 48) எனவும்

"படலாற்ரு பைதல் லுழக்கும் கடலாற்ருக்
காமநோய் செய்தஎன் கண்" (குறள் 1175) எனவும்

"பதிமருண்டு பைதல் லுழக்கு மதிமருண்டு
மாலே படர்தரும் போழ்து" (குறள் 1229) எனவும்

வருவனவற்ருல் காதல்நோயுழப்பவ ரிடுக்கண் கண்டுணர்க. பொச்சாப்பு, மறதி. இது காதலர் அன்புத் திணைக் குரித் தாதல் "வேட்கை ஒருதலே" எனுங் களவியற் சூத்திரத்தும் மறத்தலேயும் களவுக் கைகோளின் சிறப்புடை மரபினவையு ளொன்ருக் கூறுதலானும் விளங்கும். பொருமை—காதலர் ஒருவர் பழி ஒருவர் ஆருமை, ஒல்லாமை. இயற்பழிக்கும் தோழி கூற்றும் ஏனேர் கூற்றும் தாங்காது மறுத்தல் காத லியல்பாம். இயற்பழித்த தோழியை மறுத்து,

"இதுமற் றெவனே தோழி! துனியிடை
இன்னம் என்னும் இன்னுக் கிளவி
....

"திருமனேப் பலகடம் பூண்ட
பெருமுது பெண்டீரே மாகிய நமக்கே (குறுந். 181) எனவும்

"......மான்மறி ......பெருவரை நீழ லுகளும் நாடன்
கல்லினும் வலியன் தோழி!" (குறுந். 187) எனவும்

".......பெருங்கனுடன், இனிய னுகலின், இனத் தினியன்ற இன்னுமையினும் இனிதோ இனிதெனப் படூஉம்புத்தே ளுடே" (குறுந். 288) எனவும், "நாடன் நயமுடையன் என்பதனுல் நீப்பினும்வாடல் மறந்தன தோள்' (ஐந்திணை எழுபது செய். 2) எனவும் "பெருமலே நாடற்கியானெவன் செய்கோ என்றி; யானது நகைஎன உணரேனுயின், என்னுகுவைகொல் நன்னுதல் நீயே" எனவும் தலேவனேப் பழித்த தோழியை வெறுக்கும் தலேவி கூற்றும் வருதல் காண்க.

வியர்த்தல்: நாணுலும் நடுக்கத்தானும் வேர்த்தல் காதல ரியல்பாதல், "பொறிநுதல் வியர்த்தல்" என இதன் பின் கூடு-ம் சூத்திரத்து வருதலானு மறிக.

"நின் பிறைநுதற் பொறிவியர்
உறுவளியாற்றச் சிறுவரை திற"

எனவரும் அகப்பாட்டினுமிது குறிக்கப்படுதல் காண்க. ஐயம், காதல் மிகையாற் கடுத்தல். இது முதற்காட்சியினிகழும் ஐயமன்று; அது தெளிந்தபின் என்று மெழாதாதலின். ஈண்டு ஊடலில் விளையுமுணர்வைக் குறிக்கும்.

"கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்-காட்டிய சூடினீரென்று" "வழுத்தினுள் தும்மினேனாக அழித்தழுதாள் யாருள்ளித்தும்மினீர் என்று" "தும்முச் செறுப்ப! அழுதாள், நுமருள்ளல் எம்மை மறைத்திரோ என்று—" என்பன போல வருவன கண்டு கொள்க. மிகை, கைம்மிகு காதலான் வரும் நிறையழிவு. இஃது இப்பொருட்டாதல் "பொழுதுதலை வைத்த கையறுகாலை இறந்த போலக் கிளக்குங் கிளவி மடனே வருத்தம், மருட்கை, மிகுதியொ-டவை நாற்பொருட்கண் நிகழு மென்ப" எனப் பொருளியலிலும், மறத்தலின்பின், "மயக்கம் சாக்கா டென்றச் சிறப்புடை மரபினவை" எனக் களவிய விலும் வருதலானறிக. "காமக் கணிச்சி யுடைக்கு நிறை என்னும் நாணுத்தாழ் வீழ்த்த கதவு" எனத் தலைவற்கும் "பன்மாயக் கள்வன் பணிமொழியன்றோ நம்பெண்மை யுடைக் கும் படை" எனத் தலைவிக்கும் காதல்மிகையும் அதனால் நிறை யழிவும் சுட்டப்படுதலறிக. நடுக்கு; காதலர்க்கு உணர்வு மிகையானும் பனிப்பு. "ஆம்பல் குறுநர் நீர் வேட்டாங்கு இவள் இடைமுலைக் கிடந்தும் நடுங்கலானீர்" (குறுந். 178) எனத் தலைவனுக்கும் "சூர்நசைந்தனையையாய் நடுக்கங் கண்டே ....மடந்தை! பரிந்தனன் அல்லனோ இறை இறையானே?" (குறுந். 52) எனத் தலைவிக்கும் முறையே காதல் வேகத்தானாய நடுக்கம் குறிக்கப் பட்டமை காண்க.

இவ்வாறு அகத்துறைகளுக்குச் சிறந்துரிய இவற்றையும் முன் "எட்டே மெய்ப்பாடு" என வகுத்துப் பிரித்த எண்ணான் குணர்வு போலவே அகத்துக்கும் புறத்துக்கும் ஒப்பவருவன எனக் கருதுவர் பழைய வுரைகாரர். நாணன்காய் எட்டுவகைப் பெற்றுப் புறனே தோன்றலால் மெய்ப்பாடாமெனச் சுட்டி

ஒருபால் எனப் பிரித்து நிறுத்தி, பின் மற்றொரு பாலெனக் குறிக்கப் பெற்ற இவை முப்பத்திரண்டையும் தனித்தும் நானான்காயும் எண்ணாமல், எவ்வெட்டாய் நான்கு வகையிற் றொகுத்ததன் நயமும் பயனும் அவருரையில் விளக்கப் பெறாமை யானும் இவை முன் முப்பத்திரண்டின் வேறுபட்ட பான்மைய எனச் சூத்திரச் சொற்றொடர் சுட்டுதலானும் அவருரை பொருந்தாமை யுணர்க. அன்றியும், இவையும் முன்னவை போலப் பொருட்பகுதிகளிரண்டற்கும் பொதுவாய் வருமெனில் பொதுஉணர்வுபலவிருக்க, இவற்றை இவ்வாறு ஈண்டுத்தொகுத் துக் கூறுதலிற் சிறப்பின்மையோடு, இவற்றுட் சில முன் மெய்ப்பாட்டு வகையில் வந்தனவாய் மீண்டுங் கூறவேண்டா தனவுமாகும். இதில் வெரூஉதலும் நடுக்கமும் முன் அச்ச மாகும்; அரற்றல் முன் அழுகையினடங்கும்; இன்புறல் முன் உவகையாகும்; மடிமை முன் அசைவிலடங்கும்; இடுக்கண் முன் வருத்தமாகும்; இதனாலும் இவர் கருத்து ஈண்டுப் பொரு ளன்மை தேறப்படும். பிறிதொரு பான்மைத்தாம் இவை முப்பத்திரண்டும் நானான்காயும் தனித்தும் எண்ணப்படாமல் எவ்வெட்டாய் நான்கு வகையிற்றொகுத்ததன் நயமும் பயனும் அவருரையில் விளக்கப் பெறாமையானும், இவை முன்னவற்றின் வேறுபட்ட பான்மைய எனத் தெளிக்கப்பட்டமை யானும், அவர் கூற்று பொருந்தாமையறிக.

கம்பரும் மக்கள் இயல்பும்

* திரு. T. K. சிதம்பரநாதமுதலியார் அவர்கள் B. A., B. L.

பொதுவாகப் புலவர்கள் கதை எழுதுவதாயிருந்தால் பேருக்கு அதலம், பாதளம் என்றெல்லாம் களம் வகுக்கலாம். ஆனால் அவர்களுடைய மனமானது தங்கள் சொந்த நாட்டையும், தாங்கள் உறவாடி வந்த மக்களையும் விட்டுப் போக முடியாது. சேகப்பிரியர் பிற தேசத்துக் கதைகளைக் கையாண்டார். பெயர்கள் மாத்திரம் அந்தந்த தேசத்துக்கு உரியனவே ஒழிய ஆடவரோ, பெண்டிரோ, நாட்டுப் பண்போ எல்லாம் அவருடைய சொந்த ஆங்கில தேசத்துக்கே உரியன என்று ஆங்கிலேயர்கள் சொல்லுவார்கள்.

கம்பரும் இராமாயணத்தைப் பாடும்போது தமிழ்நாட்டை விட்டுப் போய்விடவில்லை. பாத்திரங்களும் தமிழ் நாட்டு மக்களே.

தசரதனும் அவனது சத்தியமும் தமிழ்நாட்டில் கண்டவை; கணவனைவிட நெருங்கிய கேளிர் பிறர் இல்லையென்ற சீதையின் மனைமாட்சியும், இலக்குவன் பரதன் சத்துருக்கனரின் சகோதர வாஞ்சையும் இங்கு இருந்தவையே. இராவணனும் அரக்கர்களும் இதர தேசங்களிலெல்லாம் இருந்தது போலத் தமிழ் நாட்டிலும் இருந்தார்கள். கற்களுக்கிடையே மல்லிகை பூத்த மாதிரி விபீடணர்களும் தமிழ் நாட்டில் உண்டு. கௌசலை சுமித்திரைகளோடு கைகேசி, கூனி, சூர்ப்பனகைகளும் எங்குமுள்ளவர்கள் தான்.

இத்தனை வகைப்பட்ட மக்களையும் அவர்கள் இயல்புகளையும் கம்பர் எடுத்துக் காட்டும்போது, எல்லாம் நமக்குத் தெரிந்தவைகளாகத் தான் இருக்கின்றன. மக்களின் மனப்பாங்கு, சென்ற ஆயிர வருடத்தில் மாறுபாடு அடைந்ததாக இல்லை. மக்கட் பண்பு, ஏதோ மாறுபடாத நித்தியப் பொருள் போலவே தோன்றுகிறது.

ஆனாலும் ஒரு வேற்றுமை உண்டு. முற்காலத்தில் வாழ்க்கையெல்லாம் கிராம வாழ்க்கையாகவே இருந்தது. இக்காலத்திய நகர வாழ்க்கையும், புகைவண்டி தப்பி விடுமோ என்கிற

---

* திருச்சிராப்பள்ளி ஒலிபரப்பியில் முதலியார் அவர்கள் பேசியது.

பரபரப்புப் பாவனையும் அப்போது கிடையாது. ஆண், பெண் மக்களையும் அவர்கள் செயல்களையும் ஆர அமரப் பார்த்து அனுப விக்கும் தன்மையாய் இருந்தது. அதனாலே அக்காலத்தவரு டைய உணர்ச்சிக்கு மிகுதியான வலியுண்டு. ஆழமுமுண்டு. உணர்ச்சிகளின் வலியிலும் ஆழத்திலுந்தான் நமக்கும் பண்டைக் காலத்தவருக்கும் வேற்றுமை. அந்த உணர்ச்சி பாவத்தை யெல்லாம் முத்துச் சலாபம் குளித்த முறையில் முழுகிக் கண்ட வர் கம்பர். கவியும் அதனாலே இதயத்தின் அடிப்படையான ஆழத்திலிருந்து வருகிறது. மேல் நாட்டார் இதைத்தான் " கிளாஸிக் " அதாவது இலக்கிய உயர்தனிப்பண்பு என்று சொல்லுவார்கள். இந்த உயர்தனிப்பண்பு பண்டைக்காலத்தில் தான் சிறப்பாக இருந்ததென்றும் சொல்லுவார்கள். தமிழிலும் அப்படியேதான்.

இந்தப் பண்பானது மேனோக்காகப்பொருளை ஆராய்வதால் தெரியவராது. செய்யுளின் ஓட்டம், நடை, தாளங்கள் இதை ஆங்கிலத்தில் ரிதும் என்பார்கள். இவைகளினால் எப்படியோ நமக்குத் தெரிந்து விடுகிறது.

ஆடை சம்பந்தமாகவும், குடியிருக்கும் வீடு சம்பந்தமாக வும், சவாரி செய்யும் வாகனம் சம்பந்தமாகவும், அதாவது புறம் பான போர்வைகள் சம்பந்தமாகவும் நமக்கும் பண்டைக் காலத் தவருக்கும் மிகுதியும் வேறுபாடுதான். ஆனால் உள்ளம் சம்பந்த மாக வேறுபாடில்லை என்றே தெரியவரும். அது எப்படி என்று பார்க்கலாம்.

கல்வி பற்றி அக்காலத்து அறிவாளிகளின் நோக்கம் எப்படியிருந்தது என்பதைக் கம்பர் நம்மிடம் சொல்லுகிறார். பொது மக்களின் அபிப்பிராயத்தைக் கவனிக்க வேண்டிய தில்லைதானே.

எல்லாருக்கும் எல்லாப் பொருள்களையும் ஆராய்ந்தறிய வசதிகள் ஏற்படுமானால் எல்லாரும் அறிவாளிகளாய்த் தான் இருப்பார்கள். அந்த ஏற்பாட்டில் நிபுணர்கள் என்ற வகை இல்லாமற் போய்விடும். இதை " ஒண்மை இல்லை பல் கேள்வி ஓங்கலால் " என்கிறார். ஒண்மை என்றால் 'நிபுணத்துவம்' ஆங் கிலத்தில் "ஜீனியஸ்" என்று சொல்லுவார்கள்.

இனி, பெண்கள் சம்பந்தமாகக் கல்வி எப்படி இருக்க வேண்டும் என்று எண்ணினார்கள்?

பெண்கள் விசாலமான கண்ணும் பிறைபோன்ற நெற்றியும் படைத்தவர்கள். அவர்களுக்குக் குலத்தால் வந்த செல்வம் வளமாயிருந்தது. அப்படியே இயற்கையோடு பயின்று வந்த கல்வியும் வளமாய் இருந்தது. ஏட்டுக்குள்ளும் வெறும் சொற்களுக்குள்ளும் வைத்து வேக்காடு கொடுத்து வந்த தல்ல அந்தக் கல்வி. இதை,

பெருந்தடங்கட் பிறை நுதலார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்

என்கிறார் கம்பர்.

இப்படி செல்வமும் கல்வியும் இயற்கையாக நயம் பெற அமைந்திருந்ததால் அதாவது "பூத்தலால்" என்ன பயன் விளைந்தது ?

"வருந்தி வந்தவர்க் கீதலும்"

ஏழைகள் வந்த போது தானதருமங்கள் செய்தார்கள் என்பது ஏற்பட்டது. மற்றபடி நாள்தோறும் நடப்பதென்ன ?

"..................வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே.

இங்கே ஒரு செய்தி ஞாபகத்திற்கு வருகிறது :—

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் பிரான்ஸ் தேசத்தில் ஒரு பெண்மணி இருந்தாள். அவள் செல்வத்தினாலும் கல்வி யினாலும் மிக மேம்பட்டவள். அதுகாரணமாக ஐரோப்பா கண்டத்திலுள்ள சிறந்தபுலவர்களும்ஆசிரியர்களும் அவருடைய அரண்மனையில்வந்து ஒன்று கூடவும் சகலகலைகளையும் ஆராயவும் வசதி ஏற்பட்டது. அவருடைய அரண்மனை உலகப்பிரசித்தி பெற்ற சங்கமாய் இருந்தது. பாண்டியன் மதுரையில் நடத்திய சங்கத்தை ஒத்தது என்று சொல்லலாம். அவள்பெயர் 'மாடம் டிஸ்டீல்' இந்த மாதரசியை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு பாட்டைப் பார்க்கலாம்.

பெருந்தடங்கட் பிறை நுதலார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும், வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே.

இந்தச்செய்யுள் பல ஆண்டுகட்கு முன் நம் சகோதரிகள் சில்லரைப் பார்த்து எழுதியமாதிரிதான் இருக்கிறது,

இனி, மக்கள் செய்யும் தொழில்பற்றிய உணர்ச்சி எப்படி இருந்தது என்று பார்ப்போம்.

இந்த நாட்டுக்கு இன்றியமையாத தொழில்கள் உழவும் வாணிகமும். உழவுத்தொழிலுக்கும் வாணிகத்தொழிலுக்கும் சரியான பாதுகாப்பு இல்லையென்றால் அவைகள் நடைபெறவே முடியா. கொள்ளைக்காரர்களை அடக்குவதற்குத் திறனும் வலியுமுள்ள அரசன் இல்லை என்றால் யாராவது நிலத்தை உழுவார்களா? கடையும் கடைத்தெருவும் ஒருநாள் இருக்க முடியுமா?

நாட்டையும் நாட்டிலுள்ள எல்லாத் தொழில்களையும் திறம்படப் பாதுகாக்கவல்ல வீரனாகிய இராமன் நாட்டை விட்டுக் காட்டுக்குப் போகிறான் என்றால் மக்களுக்கு எவ்வளவு பயம், எவ்வளவு துயரம் உண்டாகும். நாட்டில் திருமகளுக்கும் பூமகளுக்கும் இடமேது? இதைக்கம்பர்,

"பொன்றிணி போதினாளும்" திருமகளும்
"பூமியும்" நிலமகளும் புலம்பிநைய,

இராமன் அரசைத் துறந்து காட்டுக்குப் போகிறான் என்கிறார்.

அமைதியானகாலத்தில் அந்தத் தெய்வங்களுக்குஎவ்வளவு மதிப்பு உண்டு. ஆனால் யுத்ததேவதை பிரசன்னமாய்விட்டால் அவருடைய சன்னிதியில் மேலே சொன்ன இலக்குமியும் பூமாதேவியும் அடிமைகள் தான். தற்காலத்து அரசியலில் எல்லாம் இந்த முறைதான் கையாளப்பட்டு வருகிறது. நாட்டின் வருவாயில் பெரும்பகுதி, ராணுவத்துக்குப்போய்விடுகிறது என்கிற கணக்கு ஒன்றைப் பார்த்தால் போதும்.

இந்த முறையைத்தான் கம்பர் காலத்து ராணுவமக்களும் அனுசரித்து வந்தார்கள். எப்படி என்று பார்ப்போம்.

சூர்ப்பனகை இலக்குமணனால் மூக்கு அறுபட்டவுடன் கரனிடத்திற்போய் முறையிடுகிறாள். இராமரைப் பல அரக்கர்கள் வந்து எதிர்க்கிறார்கள். "திரிசிரா" என்ற போர்வீரனும் வந்து யுத்தம் செய்கிறான். அவன் மடிகிறான். அரக்கர்கள் எல்லாரும் பயந்து ஓட்டம்பிடிக்கிறார்கள். அச்சமயம் தூடணன் என்ற வீரன் வந்து ஓடுகிறவர்களைத் தடுத்து அவர்களுடைய வீரதருமத்தைப்பற்றி மிகுந்தஆவேசத்தோடு பேசுகிறான். 'அடே, நீங்கள் எல்லோரும் வீரர்களாயிற்றே! இந்த வீரத்தொழிலை விட்டுவிட்டுக் கேவலமான தொழிலுக்கா போகிறீர்கள்?' என்று ஆர்ப்பரிக்கிறான்.

"கேவலம் கடை வைத்துக் காலத்தைப் போக்கலாம் என்று எண்ணுகிறீர்களா? வயிறு நிறையச் சாப்பிடலாம்தான். ஆனால் அது ஒரு வாழ்க்கையா ?"

"ஆர வாழ்க்கையின் வணிகராய் அமைதிரோ," என்றான். மேலும், "உங்கள் கையில் கூர்மையான வேலும் வீரச் செயலெல்லாம் செய்துவந்த வாளும் இருக்கின்றன. அவைகளை என்ன செய்யப் போகிறீர்கள்?"

"..................அயில் வேல்
வீர வாட்கொடு கொழுவடித் துழுதிரோ?"

உழவுத்தொழிலே அவ்வளவு கேவலமாம். யாருக்கு?

ஒரே போர் வெறியில் வாழ்ந்து கொண்டிருக்கும் பகைவரான வீரர் கையிலிருந்து பறித்த வாளையல்லவா நீங்கள் கையிலேந்தியிருக்கிறீர்கள்! உங்களுக்கு உழவுத் தொழில் கேவலந்தான் என்கிறான்.

"..................வெறி போர்த்
தீர வாழ்க்கையின் தெவ்வரைச் செருவிடைப் பறித்த
வீர வாட்கையீர்"

வீரவாளைக் கையிலேந்தியவர்களே! என்கிறான். இனி பாட்டைப் பார்க்கலாம்.

"ஆர வாழ்க்கையின்
வணிகராய் அமைதிரோ, அயில் வேல்
வீர வாள் கொடு கொழுவடித்
துழுதிரோ, வெறி போர்த்
தீர வாழ்க்கையின்
தெவ்வரைச் செருவிடைப் பறித்த
வீர வாட் கையீர் எங்ஙனம்
வாழ்திரோ, விளம்பீர்."

யுத்த தேவதை கொலுவீற்றிருக்கும்போது இலக்குமி தேவியும் பூமா தேவியும் கேவலமாகத்தான் கருதப்படுவார்கள். யுத்தம் என்பது உலகத்தை விட்டு என்று நீங்குமோ அன்று தான் உலகத்துக்குச் செல்வமும் நலமும். அப்படி ஒரு அரசு வேண்டும் என்பதே கம்பருடைய குறிக்கோள். அந்த அரசுக்குக் கம்பர் உருவாக்கிய இராமர் பேரரசர்.

வள்வல் கண்டீரக்கோப் பெருநள்ளி

(ஒரு சிறு நாடகம்)

சிவ. குப்புசாமி
தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 15, மலர் 9, பக்கம் 360.)

இயல்-ரு—காட்சி-க

உறுப்பினர் :— இளஞ்சேய், வன்பரணர், இளநங்கை, கண்டீரக்கோப் பெருநள்ளி.

இடம் :— நடுக்காடு.

பொழுது :— வேனில் நடுப்பகல்.

[வறுமையுற்றுத் தம்மவருடன் கான்போந்த வன்பரணர், நள்ளியால் போற்றப் பெறுதல்]

இளநங்கை :—[மிகுந்த சோர்வுடன்] தந்தாய்! நாம் போகுமிடம்சேர இன்னும் எவ்வளவு தொலைவு நடக்கவேண்டும்? விடிந்ததுமுதல்பதினைந்துநாழிகைக்குமேலிதுவரையிலாகியும்தாங்கள் இன்னும் எங்களைக் கால்கடுக்க நடக்க விடலாமா? அண்ணல்! நெருநல் பகற்பொழுதில் உணவு கொண்ட எங்கட்கு, இன்று பகல்வேளை பாதிகழிந்தும் கால்வயிற்றுக்கஞ்சி கிடைக்கும் வழிகூடக் கிட்டவில்லையே? எனது வயிறு மிகவும் வாடிக்குழைகின்றது; கால்கள் நடுங்குகின்றன. காதுகள் அடைக்கின்றன; கண்களோ, மயக்கம் மேலிட இருளுகின்றன. அம்மம்ம! இனி என்னால் காலெடுத்து வைக்க முடியவே முடியாது. **[துவண்டு நிற்றல்]**

வன்பரணர் :—இளநங்காய்! என் கண்ணே, சிறுபொழுது தாங்கிக் கொள்; கலங்கவேண்டாம். என்செய்வது? இதோ வந்து விட்டோம். விரைவில், நாம் சேரும் இடத்தையும் அடைவோம். **[கவலையுடன்]** ஆ, இறைவ! எனது அறிவின் திறனை யுணர வியலா வேற்றுநாடுசென்றமையாலன்றோ, இன்று,

யான், இத்துணைத் துயரமும் எய்தலாயினேன். என் கைப் பொருள்களும் செலவழிந்தன; வயிற்றுப்பசி நீங்கச் சிறுவுணவு பெறுதற்கும் இங்கு வழியில்லை..........என் மகளே! எவ்வாற் றுயினும் நின் துன்பத்தைத் தாங்கிக்கொண்டுவருக. இன்னும் சின்னேரத்துள் நாமனைவரும் நள்ளியின் நல்விருந்தினரா யமையலாம்.

இளஞ்சேய் :—அண்ணல், அண்ணல்! நான் கூறுவதைக் கேட்டருள்க. என்னை நோக்குங்கள். எனக்குக் களைப்பு மிகுதி யாகின்றது. என்முகத்தைக் கேட்டாலும் அஃதுரைக்குமே. ஐயகோ! எனக்கு நா வறட்சி எடுக்கின்றது; என் உடம்பும் களைப்பு மிகுதியால் நைந்து வருகின்றது. எனது வயிறை நோக்குங்கள்; பசியினால் அஃது எப்படிக் குழைகின்றதெனத் தெரியுமே. எனக்கு நெஞ்சு படபடக்கின்றது; கைகால்களி னுள்ள நரம்புகள் தசைகளை வலித்து இழுக்கின்றன. தந்தாய்! என்னால் மூச்சு விடக்கூட இயலவில்லை; இதோ, கீழேசாய்வேன் போலுள்ளேன்; ஓரடியும் எடுத்துவைக்க வலிமையும் எனக் கில்லை. ஆ! என்செய்வேன். [தளர்ந்து கீழிருத்தல்]

வன்பரணர் :—அந்தோ! யான் என்செய்வேன்? எனக் குற்ற இத்துன்பத்தினை எவர்பாற் சென்று கூறுவேன்? ஆ, கடவுளே! எனக் கிவ்வாறு வரலாகுமா? பரிசில்கள் பலபெற்று வரிசைகள் மிக, யான் வாழ்ந்த அந்நாளில், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக, வளனும் நலனும் பொருந்த வாழ் வுடன் கூடிமகிழ்ந்த என்செல்வ மக்கள், இன்று, இந்நடுக்கானில், வயிற்றுப்பசியால்வாடி, நடக்கவும் நிற்கவும் இயலாமல்நைந்து குழையுமாறு, என்னை இடர்ப்படுத்தல் நன்றோ? எளியவர்க் கிரங்கும் இன்னருட் செல்வமே! 'வறியார்க்கொன் றீவதேயீகை, எனும் முதுமொழி இன்று பொய்த்ததோ? எட்டுணைச்சார்பு மின்றி வறுமையின் எல்லையுற்று வாடிவருந்தும் எம்பாலன்றோ நின்னருட்பெருக்குச் சுரக்கவேண்டும்? அஃதவ்வாறில்லா திருத் தல் என்னை?....ஆம், ஆம். எய்தவனிருக்க அம்பைநோவதால் ஆவது என்? என் ஊழ்வலியே என்னைக் கொடுமைக்காளாக்கி யதுபோலும்? நன்று....என்செல்வங்காள், வருந்தற்க. இங்ஙன் நீவிர் அமர்க; சற்று அலுப்பு நீங்கியதும் நாம் செல்வோம். [யாவரும் இருத்தல்.]

இளநங்கை :—ஆ! எந்தாய், அதோ, காண்மின்! எவனோ ஒருவன் நம்மை நோக்கியன்றோவருகின்றான். நம்மை என் செய் வனோ; ஆ, நாங்கள் என் செய்வோம்?

வன்பரணர் :—மகளே ! அஞ்சாதே. நாம் ஏன் அவன்பால் அஞ்சவேண்டும் ? நாம் அஞ்சி நடுங்குமாறு நம்மிடம் என்உளது? அமைதியுடனிருப்பாய். (உற்றுநோக்கி) இளநங்காய் ! வருபவன், ஒருக்கால் இக்காட்டுக்குரிய வேட்டுவன்போலும். அவனது தோற்றமும் உடையும் உயர்ந்த மரபினர்க் குரியனவாயுள்ளன. வேட்டமாடவே இக்காட்டினை அடைந்தவனுகும் எனக் கருது கின்றேன்....என்னே ! எம்மையன்றோ நோக்குகின்றான். புன்னகை பூத்த முகத்துடன், எம்மைநாடி அண்மையிலன்றோ வருகின்றனன். ஆ, வியப்பினும் வியப்பு ! எம்மை நோக்கித்தன் இருகைகளையும் உயர்த்தி வணங்குகின்றனனே. [எழுதல்.]

கண்டீரக்கோப் பெருநள்ளி :—பெரும, எழுதல்வேண்டாம் அப்படியே வீற்றிருங்கள். அந்தோ, மிகவும் இளைத்துள்ளீர்களே. நெடுந்தொலைவிலிருந்து வந்திருக்கின்றீர்கள்போலும். மிகுந்த வாட்டமும் களைப்புக் குறியும் நும்பால் தோன்றுகின்றன. மலர்முகம் பெற்ற இவ்விளைய மக்களும் மிகவும் சோர்வுற்றுப் பசித்துள்ளனர்போல் காணப்படுகின்றனர். இனி இடையீடின்றி, நும் உயிர் வாடாது, விரைவினில், இன்னே வேண்டுவன புரிவேன் [சூழ நோக்குதல்] யாண்டோ போயுள்ளனர் வழிதப்பி, என் துணைவர்கள் ; எனினும் இங்கு இடர்ப்பாடின்று. ஒருநொடிப்பொழுது பொறுத்தருள்க [தீ யெழுப்பி உணவு அடுதல்] பெரும ! இவ்வுணவு மிக்க சுவைபொருந்தியது; மென்மையும் கொழுமையும் மிக்கதாயிருப்பதால் நும் களையை உடனே போக்கும். இதனை நும் மக்களுடன் உண்டு பசிப்பிணியை ஒருவாறு நீக்குக. [புலவர், தமருடன் உண்டு, அருவி நீர் அருந்தல்.]

வன்பரணர் :—ஆண் தகையே! களைகணின்றி வாடியஎம்மை, இக்கடிய கானில் வலியவந்து காத்து, உணவளித்து மகிழ்ந்த நினது இச்செயல், எம் அன்புகெழுமிய உள்ளத்தை நின்பால் என்றும் வணங்கச்செய்வித்தது. நின் அருட்செயலால், யாங்கள் எம்மை வாட்டிய பசி தவிர்ந்தோம்; எம் உயிர், திளைக்கப் பெற்றோம். அருட்செல்வ! நினக்கு, என்றும் குன்றுவாழ்வும் பெருநலனும் ஓங்கிப்பெருகுக! அன்புடையோய் ! வணக்கம் ; சென்று வருகின்றேம், (கைகூப்பி) விடை யளிப்பாயாக.

கண்டீரக்கோப் பெருநள்ளி :—புலவர்பெரும ! இதுபோது, யான் இக்காட்டினிடமாக இருக்கின்றேன். ஆகையால், விரைவினிற் போந்து, தங்களது வறுமை நீங்குமாறு, பெறுதற்கரிய

பெருமைமிக்க அணிகலன் கொடுத்தற்கு, இவ்விடத்தில் என்னிடம் வேறொன்று மின்று. எனினும் [முத்துமாலே, கடகம் இவற்றைக் கழற்றி வழங்கி] இவற்றைப்பெற்றுமகிழ்ந்து, செல்க.

வன்பரணர் :—(வியப்புடன் பெற்று) எம் வறுமைநோய் களேய, உளம்பற்றிய வள்ளால்! கொடைப் பெருங்குன்றே! யான் நின்னேப்பற்றிக் கேட்பதற்காக வெகுளாது, எம்மைப் பொறுத்தருள்க. அன்ப, நீவிர் யாவிர்? எளியேன் நுமது பெயரும் உறைவிடமும் அறியலாகுமா?

கண்டீரக்கோப் பெருநள்ளி :—(புன்னகை பூத்து) சான்றோய்! அவற்றை அறிவதால் நுமக்காவதென்னே? யான் இன்று கொடுத்தனகொண்டு, இனிதே நும்மக்களுடன் கவலேயின்றி வாழுமின். யான் சென்று வருகின்றேன். [சென்று மறைதல்.]

வன்பரணர் :—ஈதென்ன விந்தை! பெயரும் கூறாது, ஊரும் நவிலாது, பெறுதற்கரிய பெரும்பொருளேத் தந்து, எம்மைப் பற்றி எதுவும் உசாவியுணராது செல்லுகின்ற இப்பெருமகன் யாவனோ?....முழுமுதற்றலேவ, எம்குறை தவிர் முருக! இதுவும் நினது விளேயாட்டுப்போலும் (கைகூப்பித் தொழுதல்.)

காட்சி முடிவு

இயல்-ரு—காட்சி-உ

உறுப்பினர் :—மாடலன் (ஒருகாவலன்); வன்பரணர்; இளநங்கை.

இடம் :—நடுக்காடு.

பொழுது :—மாலேப்போது.

[கண்டீரக்கோப் பெருநள்ளியே தமக்கருளினன் எனக் காவலனுலறிந்து வன்பரணர் மகிழ்தல்]

மாடலன் :—(மிகுந்த சோர்வுற நின்று) அடேயப்பா; என்ன பாய்ச்சல், என்ன வோட்டம்! மூச்சுத் திக்குமுக்காடி விட்டது. என்வாணுளில் இன்று வெருண்டு ஓடியது போல என்றும் யான்

ஓடியதே யில்லை. எம் தோட்டிமலை நாடு இன்று வரையில் எத்தனையோ வீரர்களைப் பெற்றது; அவ்வீரருள் ஒருசிலர் உளத்தினுல் மறக்கவியலாத அத்துணைப் பெரிய செயல்களை யெல்லாம் மிக எளிதில் முடிப்பார்கள் என்று கூறுவர்; அச்சிலருள் ஒரு திறத்தவர்க்கு 'வில்லி' முதலிய சிறப்புப்பெயர் களும் வழங்கி வந்துள்ளன; எனினும், அவரனைவரும் எம் பெருமாற்கு ஈடாகார்; வில்திறன் பெற்ற எம்நள்ளியையொத்த வில்லியை, எவரும் அறிந்திரார் என்பது திண்ணம்....

வன்பரணர் :—ஐயா, ஐயா!

மாடலன் :—(திரும்பி நோக்காது) மிக விரைந்து செல்வது குதிரை என்பர்; பாய்ந்தோடித் தாவிச் செல்வதில் வன்மை யுற்றது மான், என எவர்க்கும் தெரியும். இவையாவும் எம் பெருமான் நள்ளியின் ஓட்டத்தினையும் தாவிப்பாயும் விரைந்த செலவையும் கண்டனவாயின், அம்மம்ம! தம் சிறுமைக்குவெட்கி, ஆண்டே தலைகுனிந்து நாணுறும் என்பது திண்ணம்....

வன்பரணர் :—இளநங்காய்! இவன் நள்ளியின் காவலன் போற் காணப்படுகிருன். மறுபடியும் நான் அழைக்கின்றேன். ஐயா! காவல!

மாடலன்:—(வேறுதிசை நோக்கி) ஆம், ஆம். அப்படித்தான் தோன்றுகிறது. நன்று; ஆனல்,........மானைப் பின் தொடர்ந்து சென்றவர், யாண்டுதான் செல்லக் கூடும்? ஒருக்கால், நாம் சென்றவழி தெரியாது, நகர் நோக்கித் திரும்பினரோ? அன்றி எங்களைத் தேடி யலைகின்ருரோ? இதற்கென் செய்வது? பொழுதும் போகத் தலைப்படுகின்றது; புள்ளினங்களும் தத்தம் பெடையோடு இருக்கை யடைகின்றன. கங்குற் பறவையாம் ஆந்தையும் கிளைகூட்டி அலறுகின்றது. என்னை? மாலைப்போது வந்துற்றும் மான்பின் சென்றவரது வரவு கிட்டவில்லையே. "தேடிப் பார்க்கின்ருேம்" எனச் சொல்லிப் போன அந்த எயினனும் காடனும்கூட, நான் தனித்திருப்பேன் என்றுணர்ந் திருந்தும் இன்னும் திரும்பவில்லையே. நான் எங்கு செல்வது?

இளநங்கை :—அண்ணல், நானழைக்கின்றேன். நீங்கள் மறுபடி கூப்பிட்டாலும் அஃதவன் காதில் விழாது. ஐயா! (மிக எழுப்பிய குரலில்) ஏஏ, ஐயா! (கையைத் தட்டல்).

மாடலன் :—(விரைவில் திரும்பி) யாரது? நீவிர் யாவிர்? இங்கு என் வந்தீர்; எப்படி வந்தீர்?

வன்பரணர் :—காவல ! யான் ஒருதமிழ்ப்புலவன் ; கிழக்கு நாட்டினன் ; என்னோடு இவணுள்ள இவர், என் குடும்பத்தவராகும். ஐயா ! யாங்கள் மிகுந்த தொலைவிலிருந்து வருகின்றோமாதலால் எமது கைப்பொருள்கள் யாவுங் கழிந்தன : மிக்க வறியநிலையில் நல்லுணவற்று, மாசுபடிந்த இவ்வாடையோடு இக்கான் வந்தடைந்தோம். ஈண்டு, எங்களைப் பசிப்பிணி மிகவும் வருத்தலுற்றது. உணவுபெறும் வகையோ எங்கட்குத் தெரிந்திலது. பசிநோயால் வாடிக் களைப்புற்று, மயங்கி, யாது செய்வதென வுணராது, நெட்டுயிர்ப்புக்கொண்டு, ஒரு பலா மரத்தின் நீழலிற் றங்கியிருந்தோம். அதுபோது எங்கட் குற்றதனை என்னென் றியம்புவேம் ?

மாடலன் :—என்னை ? புலவரே ! நும்மை எவரேனும் துன்புறுத்தினரோ ? அன்றி, கொடிய விலங்குகளால் அச்சுறுத்தப் பெற்றீரோ ? இனிக் கவலை கொள்ளாது என்பாற் கூறுமின். வேண்டுவன இன்னே ஆற்றுவேன்.

வன்பரணர் :—இனிய காவல ! அவ்வாறு எங்கட்குத் துன்பம் நேர்ந்திலது ; இன்பமே விளைந்தது. பொறுத்துக் கொள்க ?

மாடலன் :—ஆ! அப்படியா! நன்று. பின்னர் என் நிகழ்ந்தது?

வன்பரணர் :—அன்ப! நாங்கள் பலாவின் நீழலில் பருவுற்றிருந்தபோது, ஓர் ஆண்டகை, வேடுவன் போலுள்ளார், எம்மை மகிழ்வுடன் அணுகினார்; நாங்களிருந்த நிலையினைக்கண்டுப் பெரிதும் வருந்தி யிரங்கினார்; தன்னுடனிருந்த பச்சையுணவுப் பொருளைத் தனது கைகளினாலேயே, தீயெழுப்பிச் சூட்டுச்சுவையுள்ள உணவாக்கி எங்கட்குத் தந்தார். யாங்களவற்றை யுண்டு மகிழ்ந்ததும், எம்மிடத்துச் சில அணிகலன்களைப் பரிசிற் பொருளாக அளித்து, 'நீவிர் செல்க' என எம்மை விடுத்தார். யான் மிகவேண்டியும் ஊர், பெயர் முதலிய எவையுங் கூறாது எம்மினின்றும் விரைவாக நீங்கிக் கிழக்குத்திசை நோக்கிச் சென்று விட்டார். ஐயா ! நீவிர், அவர் யாவர் என எமக்கு விளம்பலாகுமா ?

மாடலன் :—புலவர்பெரும ! தங்கட்குதவிய அப்பெருந் தகையாளர் தோற்றத்தில் எவ்வாறு காணப் பெற்றார் ?

வன்பரணர் :—என் இனிய அன்ப! அவர்தம் திருமுடி நீலமாமணியால் இலங்கிற்று. நீண்டவெள்ளிய இறகொன்றைத் தனது வலப்புறத்தே முடியணியாகச் சூடியிருந்தார். கழுத்தகத்தே வெண்ணிற முத்துகள் விளங்கின. மார்பினில் பொற் புள்ளிகள் நிறைந்த புலித்தோல் பொலிந்தது. அழகிய மணி வடங்கள் அவர் தம் வரைநிகர் தோள்களை அணி செய்தன. கைகளில் கடகங்கள் மிளிர்ந்தன. இடுப்பில் ஓர் உடைவாள் உரையுடன் திகழ்ந்தது. வெற்றிக்கழல் புனைந்திருந்த அவர்தம் அடிகள், விலங்கின் செந்நீரால் தோயப்பெற்று, செம்பஞ்சுக் குழம்பு பூசப்பெற்றனபோல் ஒளிர்ந்தன. முதுகினில் அம்பறுத் தூணியும் கையில் வில்லும் கவின்பெறவிருந்தன. தோற்றமோ, கண்டவரஞ்சும் வேட்டுவக் கோலம்; எனினும், புன்னகை தவழும் இனிய முகமும், அருளொழுகு கண்களும், அன்பு கனிந்த சொற்களும் ஒருங்கே கூடி உறைந்தன. கானவ! அவர்தம் வடிவின்தோற்றம், 'அறனும் மறனும் அணைந்துறநின்ற ஓரருட் பெருங்குன்றம்' எனக் கூறினும் மிகையன்று.

மாடலன் :—பெரும! அவரே எம்தலைவர்; இத்தோட்டிமலை நாடாளும் மன்னவர்; வரையாது வழங்கும் வள்ளல்-கண்டீரக் கோப்பெருநள்ளி யென எவரும் புகழ்ந்து கூறும் ஏந்தல். அவரைத் தேடியே யான் இந்நேரமளவும் ஈண்டுக்காத்திருந்தேன். இதற்குள்ளாக, எம்பெருமானும் ஊரை நண்ணியிருப்பினும் இருப்பர். யான் விரைந்து செல்லல் வேண்டும். பொறுத்தருள்க. புலவர்பெரும! யான் சென்றுவருகின்றேன் ....ஆனல் ஒன்று. ஐய! தங்கள் பெயர் என்னவோ?

வன்பரணர் :—காவல! 'வன்பரணன்' என்பது என் பெயராகும்.

மாடலன் :—நன்று, பெரியோய்! வணக்கம். விடை பெறுகின்றேன். (கைதொழுது காவலன் மறைய, புலவர் அசைவற்று நிற்றல்)

காட்சிமுடிவு

வினையுணர்வும் ஞானசம்பந்தரும்*

திரு. வித்துவான், ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள்
தமிழாசிரியர், போளூர்

வினைத்தொடர்புள்ள சொற்கள் இந்நாளில் எல்லாருடைய பேச்சிலும் எல்லாக் காலத்தும் காணப்படுகின்றன. கற்றவர் கல்லாதவர், செல்வர் வறியர், இளையர் முதியர், ஆடவர் மகளிர் ஆகியயாவரும் இன்பம் துன்பம் என்ற இருவகைக்காலத்திலும் இவ்வினையைப் பற்றிய பேச்சுக்களை வழங்குகின்றனர். இன்பம் துன்பம் என்ற இரண்டின் நுகர்ச்சிக்குக் காரணம் நுகர்வோரது வினையே என்ற உணர்வு நன்கு வேரூன்றியிருக்கிறது. துன்பமுறும் ஒருவனைக்கண்டு ஆறுதல் கூறும் வேறொருவனும் "இது முன்னை வினையின்பயன்" என்று மொழிவது இயல்பாக இருக்கிறது.

தமிழ் நூல்களிலும் இவ்வினையுணர்வு நன்கு விளங்கித் தோன்றுகிறது. மிகப் பழையதாகிய தொல்காப்பியம் முதல் இன்று தோன்றும் சினிமாப் பாட்டுவரையில் எல்லாப்பாட்டுக்களிலும் உரைகளிலும் வினைபற்றிய சொல்லும் சொற்றொடரும் பயின்று வருகின்றன. இந்நூல்களுள், வினைத்தொடர்பான மொழிகள், எல்லாவற்றிலும்விடத் தேவாரத்தில் மாத்திரம் மிகுதியாகவும், தேவாரப் பெருமக்களுள் ஞானசம்பந்தர் திருப்பாட்டுக்களில் மிகப்பெரிதும் இடம்பெற்றுள்ளன. ஞானசம்பந்தர் திருப்பாட்டுக்கள் சுமார் 4200 உள்ளன; அவற்றுள், சுமார் 3600 திருப்பாட்டுக்களில் இவ்வினையுணர்வு பயின்று வருகின்றது.

இங்ஙனம், இவரது திருப்பாட்டுமெட்டில் வினைத்தொடர்பானசொற்கள் பெறுவானேன்? இவர் போலும்பெருமக்களின் அருட்பாடல்களில் அத்துணைப்பயில வழங்காமையின், இது பற்றிய பேச்சு, இவர்காலத்து ஓங்கிநின்றதாகல்வேண்டும். தேவாரத்துக்கு முன்னிருந்த நூல்களிலும் இத்துணைப் பெருவழக்குக் காணப்பட்டிலது. முன்னைய நூல்கள், இலக்கணம்,

---

* இது காந்தைத் தமிழ்ச்சங்க இருபத்தெட்டாம் ஆண்டுவிழாவில் நிகழ்த்திய சொற்பொழிவாகும்.

இலக்கியம், நீதிநூல், சமய நூல் எனப் பகுக்கப்படும். இவற்றுள் இலக்கியங்களும் சமயநூல்களும் பிரிப்பின்றி ஒரு தன்மையாகவே அமைந்திருக்கின்றன. நீதிநூல்களோ இடை இடையே சமயக் கருத்தும் கொண்டு நிலவுகின்றன.

இந்தியநாட்டு நூல்வரலாறு காண்பவர் வேதங்களே மிகப் பழைமை வாய்ந்தவையென்கின்றனர். அவற்றில் மிகச் சிறிதாகவே வினையுணர்வு காணப்படுகிறது என்றும், வேத காலத்துக்குப் பின்னர் தான், இவ்வுணர்வு நாட்டில் பயில வழங்கிவருகிறது என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவருட்சிலர், இவ்வுணர்வு வேதகாலத்துக்கு முற்பட்டதென்றும் புத்த சமண சமயங்கள் நாட்டில் பரவத் தொடங்கிய பின்பே, இவ்வுணர்வு மிகுதியும் பயில்வதாயிற்றென்றும் மொழிகின்றனர். நம்தண்டமிழ் நாட்டிலும், தொல்காப்பியம்முதல், தேவாரம் தோன்றிய காலம்வரையில், வினையுணர்வு மிக்க பயிற்சியின்றி யிருந்தது. ஞானசம்பந்தர் காலத்திற்றான் அஃதாவது இன்றைக்குச் சற்றேறக்குறைய 1300 ஆண்டுகட்குமுன்புதான், வாழ்க்கையின் ஒவ்வொருநிகழ்ச்சியிலும் வினையுணர்வு விளங்கி நிற்பதாயிற்று. சமண புத்த சமயங்கள் வினையுணர்வையே அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையாதலின், அவற்றின் தொடர்புடைய நூல்களை விடுத்து, ஏனையவற்றை நோக்கின், அவை தொல்காப்பியமும் சங்க விலக்கியங்களும் எனக் காணப்படும்.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பாகுபாட்டதாகும். இதன்கண், எழுத்ததிகாரம், எழுத்தும், அது சொல்லின்கண் இடம்பெற்றுத்தொடர்வுறுதலும் கூறுவது; அதனால், அதன்பால் வினையியல்பு கூறும் பான்மை இன்றும். சொல்லதிகாரம் வினையியல்பைக் கூறுகிறது. இது, பொருளின் புடைபெயர்ச்சியாவும் வினையென்றுசுட்டி, "வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது, நினையுங்காலைக் காலமொடு தோன்றும்;" "காலந்தாமே மூன்றெனமொழிப" என்பனவாய நூற்பாக்களால் விளக்கிக் கூறுகின்றது. பொருளதிகாரம், ஆண்மகன் ஒருவன், தன் ஆண்மை துணையாகக் கொண்டு செய்யும் பொருண்முயற்சியினை வினையென்று காட்டி, அச் செய்கை நிகழ்ச்சிகளையும் "வினை" யென்றே வழங்குகின்றது. "வினைவயிற்பிரிந்தோன் மீண்டுவருகாலை, இடைச்சுரமருங்கிற் றவிர்தல்இல்லை, உள்ளம்போலவுற்றுழியுதவும்,புள்ளியற்கலிமா

வுடைமையான" எனவருதல் காண்க. பிற்காலச் சமய நூல்கள் வழங்கும் பொருளிலும் ஆசிரியர் தொல்காப்பியனார், இவ் வினையென்னும் சொல்லை, "வினையின் நீங்கி விளங்கிய அறிவின், முனைவன் கண்டது முதனூலாகும்" என்ற நூற்பாவில் வழங்கியுள்ளார்.

சங்கவிலக்கியங்களுள், பதினெண் கீழ்க்கணக்குகளுள் தொகுக்கப்பட்ட சில வொழிய, ஏனையவும், தொகை நூல்களும் அகம், புறம் என இருவகையாகும். அவற்றுட் புறப்பொருள் வழியவாகிய புறநானூறு முதலியன வினையுணர்வைக் கூறுகின்றன. வினை, நல்வினையும், தீவினையும் என இருவகைத்தாய் முறையே இன்பமும் துன்பமும் பயக்குமென்பதனை வினையறிவு மிக்க புலவர் கூறுவர். ஆகவே, இன்பம் பயக்கும் நல்வினையே மக்கள் விரும்பும் மாண்புடையதாகலின், அறிஞர், நல்வினையைச் செய்க என்று விதிப்பதும், தீவினையைச் செய்யற்க என விலக்குவதும் செய்வர். "கல்பொரு திரங்குமல்லற் பேரியாற்று, நீர்வழிப் படூஉம் புணைபோலாருயிர், முறைவழிப் படூஉ மென்பது திறவோர், காட்சியிற் றெளிந்தனம்" (புறம் 192) எனவும், "வாழச்செய்த நல்வினையல்லது, ஆழுங்காலைப் புணைபிறிதில்லை" (புறம் 367) எனவும் வருதல் காண்க. மேலும், இப்பெருமக்கள் பலரும் நலம் பயக்கும் நல்வினையையே விதந்து கூறியிருத்தலின், வினையுணர்வு நல்லது செய்தற்கே சான்றோர்களால் பண்டைக் காலத்தில் மக்கட்கு வற்புறுத்தப் பட்டதென்பது தெரிகிறது. "நல்லது செய்தலாற்றீராயினும், அல்லது செய்தல்ஓம்புமின்" (புறம் 195) எனவும், "நன்றுபெரிது சிறக்க தீதில்லாகுக" (ஐங். 9) எனவும் வருதல் காண்க. நல்வினைசெய்தவர் இம்மையிற் புகழும், மறுமையில் துறக்கவின்பமும் பெறுவர் என நல்வினையின் நலமே குறித்து, "பெரும்பெயர் நும்முன், ஈண்டிச்செய் நல்வினை யாண்டுச் சென்றுணீயர், உயர்ந்தோருலகத்துப் பெயர்ந்தனன்" (புறம். 174) எனமாறோகத்து நப்பசலைபாரும். "மயங்காது செய்தல் வேண்டுமால் நன்றே வானோர், அரும்பெற லுலகத்தான்றவர், விதுப்புறு விருப்பொடு விரிந்தெதிர் கொளற்கே" (புறம். 213) எனப் புல்லாற்றூர் எயிற்றியனாரும் பிறரும் அறிவுறுத்தியிருக்கின்றனர். அகப்பொருணூல்களும், இவ்வாறே, நல்வினை இம்மையில் இசையும் மறுமையில் துறக்கமும் பயக்குமெனக் கூறுகின்றன. "வினைவிளையச் செல்வம் விளைவது போல்" (திணைமா. 150-5) என வருவதும், பிறவும் காண்க.

இருமையும் பயக்கும் நல்வினை செய்தற்கு நல்லாற்றில் ஈட்டும் பொருளும், அதனை செய்தற்குரிய முயற்சியும் சிறந்து நிற்றலின், அவற்றைக் குறித்து ஆண்மக்கள் தம்வாழ்க்கைத் துணைவியரைப் பிரிந்தேகுதல் நலம் என்றும், அவர் செலவு வினைவயிற் செல்லும் செலவு என்றும் சான்றோர் விரியக் கூறியுள்ளனர். "வினையே ஆடவர்க் குயிரே" (குறுந். 135) "சேறும் நாம் எனச் சொல்லச் சேயிழை, நன்றெனப் புரிந்தோய் நன்று செய்தனையே, செயல்படுமனத்தர் செய்பொருட்டு அகல்வராடவர் அதுவதன் பண்பே" (நற். 24), "ஈதலும் துய்த்தலும் இல்லோர்க் கில்லெனச், செய்வினை கைம்மிக எண்ணுதி அவ்வினைக்கு, அம்மா வரிவையும் வருமோ, எம்மை யுய்த்தியோ வுரைத்திசினெஞ்சே" (குறுந். 63) என வருவன இதற்குப் போதிய சான்றாகும்:

இனி, ஆசிரியர் காவட்டனார் என்பவர், "வசையும் நிற்கும் இசையும் நிற்கும்: அதனால், வசைநீக்கி யிசைவேண்டியும், நசைவேண்டாது நன்றுமொழிந்தும்" வாழ்தல்வேண்டும் (புறம் 359) என அந்துவன்கீரன் என்னும் தலைவற்கும், ஆசிரியர் குடபுலவியனார், "செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும், ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி, ஒருநீ யாகல்வேண்டினும் சிறந்த, நல்லிசை நிறுத்தல் வேண்டினும் மற்றதன், தகுதி கேளினி மிகுதியாள" (புறம். 18) எனப் பாண்டியன் நெடுஞ்செழியற்கும் அறிவுறுத்தியனவும் பிறவும், "அந்தோ வினையே" என்று அழுங்கி மயங்காது செய்வினையைச் சிறக்க அச்சமின்றிச் செய்யவேண்டும் என்பதையே வலியுறுத்தி விளக்குகின்றன. ஓரொருகால், "நன்றிவிளைவும் தீதொடும் வரும்" (நற். 188) எனினும், அத்தீதுகண்டு அஞ்சாது வினைசெய்தல் வேண்டும்; ஒருவினையைச் செய்யுமிடத்து, இடும்பையும் இடுக்கணும் வந்து தீதுசெய்யுமாயினும், "வினையேயாடவர்க்குயிர்","வினைக் குறை தீர்ந்தாரிற் றீர்ந்தன்றுலகு", "சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம் சுடச்சுட நோற்கிற்பவற்கு", "ஊழையும் உப்பக்கம் காண்பர்" என்றெல்லாம் சான்றோர்கூறியபொருளுரைகள், அவற்றிற் கஞ்சுதலும், வினையில்மடங்குதலும் கூடா என்பதனையே வற்புறுத்துகின்றன.

இக்கூறியவாற்றால், வினையெனச்சான்றோர் எடுத்துக் கூறியது யாவரும்மடியின்றிச்செய்தற்குரிய இம்மையில் இசையும் மறுமையில் பேரின்பமும் பயக்கும் நல்வினையே யென்றும்,

அதனால், நலம்பயக்கும் நல்வினையே பண்டைச்சான்றோரால், நல்வினை, நன்று ஆள்வினை, வினையெனப்பல்லாற்றானும்விதந்து கூறப்பட்டதென்றும் அறிகின்றோம். "யாம்செய் தொல்வினைக்கெவன் பேதுற்றனை" (நற். 88) என்றாற் போல்வன, வினை செய்யுமிடத்து, எதிர்பாராமல் வரும் இடர்கட்கு உள்ளம்உடையாமல் ஊக்கம் கோடற்கெழுந்தவை என்றும், "இடுக்கண் வருங்கால் நகுக" என்றாற்போல்வன, "இன்பமும் இடும்பையும் உணர்வும் பிரிவும், நண்பகலமையமும் இரவும்போல, வேறுவேறியலவாகி மாறெதிர்ந், துளவென வுணர்ந்தனை" (அகம் 327) என வுணர்ந்து, இவற்றைப் பொருள்செய்யாது, செய்வினையைக் கடைபோக ஆற்றுவது குறித்துப்பிறந்த அறவுரையென்றும் "துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய நெஞ்சம் துணையில்வழி" என்றாற்போல்வன, உயிரின் வழி வினை நிகழ்தலுண்டேயன்றி, வினையின்வழி உயிர் இயங்குவதில்லை என்றும் காட்டக் காண்கின்றோம். இதுவே தேவார காலத்திற்கு முன்னிருந்த சான்றோர் கொண்டிருந்த வினையுணர்வாகும்.

இதற்கிடையே, "காமஞ்சான்ற கடைக்கோட் காலை" மக்களொடு துவன்றிய கிழவனும்கிழத்தியும் சிறந்தது பயிற்றல் வேண்டும் என்ற பண்டைய முறை மாறி, "குழவியிடத்தே" துறவு விரும்பி, "இன்னா தம்மவுலகம், இனிய காண்க விதன் இயல்புணர்ந்தோரே" என்றும், "ஓடியுய்தலும் கூடுமன், ஒக்கல் வாழ்க்கை தட்குமாகாலே" என்றும் வந்த உரைகளால், உலக வாழ்வில் மக்கட்கு உவர்ப்பும், செய்யும் வினையாவும் துன்ப முடிவின என்ற முடிபும் மக்கள் கருத்தில் இடம் பெறத் தொடங்கின. முயற்சியுடையார்க்குத் தேறுதல் சொல்லி, ஊக்கம் கொளுத்தும் கருத்தாற் பிறந்த வினையுணர்வுகள், வினைக்கண் மனம் மடிந்து சோம்பித்திரிவார்க்கு அரணாகத் தொடங்கின. வினையே உயிர்கட்கு முதல் என்றும், வினைவழியே உயிர் இயங்குதற்குரிய தென்றும் மக்கள் பேசத் தொடங்கினர். வினைவழிப் பிறக்கும் இன்பமும் துன்பத்திற்கே ஏதுவென்றும், துன்பமே உயிர் உடலொடு கூடிப்பெறத்தகும் பயன் என்றும் சில சான்றோர் தெருட்டத் தொடங்கினர். இந்நிலையில், தமிழ் நாட்டிற்குப் புதியவாய் வந்த சமண புத்த சமயங்களும் துணை செய்யத் தொடங்கின. யாவரும் எப்போதும், எச்செயலைச்செய்தற்கும், "அந்தோ வினையே" என்று அழுங்கி ஊக்கம் குன்றுவாராயினர்,

ஒருவன் தன் ஆண்மையால் முயன்று பெறக் கூடிய நல்லுண்டி, நல்லுடை, நல்லுறையுள் ஆகிய இவையாவும் முன்னை வினைப்பயனே; "பண்டு செய்வினையலால் பரவு தெய்வ மொன், றுண்டெனில் தான்பயன் உதவ வல்லதோ?" என்பன போன்ற கருத்துக்கள் எழுந்து, நாட்டில் ஆண்டவன் அருட்டிறத்தையும், அவனை வழிபடுவதன் நலத்தையும் அசட்டை செய்யுமாறு தூண்டின. இக்காலமே நம் ஞானசம்பந்தர் தோன்றிய காலமாகும்; தன் உயிரறிவுக் குள்ள சிற்றுரிமையை நெகிழ்த்து, வினைக்கு அடிமை யாக்கும் சிறுமைக்காலம்; நலமும் தீங்கும், இன்பமும் துன்பமும் உயிர் தன் உரிமையறிவால் ஆண்டவன் திருவருளால் பெறுதல் கூடும் என்னும் உண்மை நெறியை மறைத்து நின்ற காலமாகும்.

ஆகவே, இக்காலம், நம் ஞானசம்பந்தர் தோன்றியகாலம், இற்றைக்குச் சுமார் சற்றேறக் குறைய 1300 யாண்டுட்கு முற்பட்டகாலமாகும். இக்காலத்தில், வினையுணர்வுக்குத் தலைமையும், ஆண்டவன் திருவருட் சிறப்பிற்குக் கீழ்மையும் மக்கள் உள்ளத்தில் தோற்றுவிக்கும் புதுக் கொள்கைகளும், புதுச்சமய நெறிகளும் கற்பித்து வந்தன. அதனால், நம் ஆளுடைய பிள்ளையார், வினைகளையும், அவை பயக்கும் பயனையும், வினைத் தொடர்பைக் கெடுக்கும் பரமனது முதன்மையையும், பிறவற்றையும்விளக்கிபருளும் கடன்மையுடையரானார். அவரது அருட்பாடல்கள் பலவும் வினையின் தொடர்பறும் முறைமையை யுணர்த்தும் நோக்கமே பெரிதும் உடையவாயின.

வினைகள்யாவும் பண்டைவினை, நிகழ்வினை (செய்வினை), எதிர்காலவினை யென மூவகையாகும். அவையாவும் பரமன் திருவருள்வழி நிற்பார்முன் வலியழிந்து, தொடர்பற்றுக்கெடும் என்பது ஆளுடையபிள்ளையார் மக்கட்கு அறிவுறுத்திய வினையுணர்வாகும். "தொல்லை வல்வினை தீர்ப்பர்சுடலை வெண்பொடி யணிசுவண்டர்" (திருத்தெங்கூர்), "மெய்த்தன்னுறும் வினைதீர் வகைதொழுமின்" (ஆலந்துறை) "வெய்யவினை நெறிகள் செல வந்தணையும் மேல்வினைகள் வீட்டலுறுவீர்" (மாகறல்) என்பன போலவரும் திருமொழிகள் வினைவகையினையும், அவற்றின் வலியின்மையையும் உணர்த்துவனவாகும்.

வினைகளே உயிர்கள் நுகரும் இன்பதுன்பங்கட்கு ஏதுவாகலின், ஆண்டவன் வேண்டப்படான் என்று கூறிய சமயக்

கணக்கர் பலர் அக்காலத்திருந்தனர் என முன்பேகூறினும்; அவர்களைத்தெருட்டுவார் போலச் சிலபல வுரைகள் பிள்ளையார் அருளியுள்ளார்.

> "நல்குரவும் இன்பமும் நலங்களவையாகி
> வல்வினைகள் தீர்த்தருளும் மைந்தனிடமென்பர்,
> மல்குமடி யார்கள் படியார விசைபாடிச்
> செல்வமறை யோருறை திருப்புகலியாமே"

என்றும்,

> "துன்பானைத் துன்பம்துடைத் தருளாக்கிய
> இன்பானை யேழிசை யின்னிலை பேணுவார்
> அன்பானை யணிபொழிற் காழிநகர் மேய
> நம்பானை நண்ணவல்லார் வினைநாசமே"

என்றும், இவ்வாறு பலவும் வருவன உள. வினைகள் அறிவில் பொருள்களாகலின், இவை தம்பயனைக் கொண்டு வினை முதலை நுகர்விக்கும் திறமுடைய அல்லவாகலின், அது செய்தற்குரிய அறிவுடைப் பொருள் ஆண்டவனே யென்றும், அதனால், அவனன்றி வினைமுதல் வினைப்பயனை நுகர்தல் கூடாமை கருதி; வினைப் பயன்களைக் கூட்டலும் பிரித்தலும் வல்ல அவனையே நல்குரவும் செல்வமும், துன்பமும் இன்பமுமாக உபசரித்துக் கூறியும், அவனுக்கு முதன்மையும் வினைகட்குக்கீழ்மையும் காட்டியும் நம் ஆளுடையபிள்ளையார் தெருட்டியருளுகின்றார்.

வினைகள் தம் பயனை வினைமுதல் நுகருமாறு கூட்டும் அறிவுடையவல்ல வாயினும், அவ் வினைமுதலைப் பற்றி விடாது தொடர்ந்து நின்று, அவ்வுயிர் எத்துணைப்பிறவி யெடுக்கினும், பிறப்புத்தோறும் அதன்கட் கிடந்து தொடர்தல் குறித்து அவைகளை "அருவினை" யென விசேடித்தல் நம் நாட்டுச் சமயக் கணக்கர் மரபு. நம் ஆளுடைய பிள்ளையாரும், வினைகளை "அருவினை', யென்று விசேடிப்பாராயினும், அவற்றின் அருமையினைச் சிதர்க்கும் தலைமை ஆண்டவற்குண்டென வலியுறுத்துவதை விடுவதிலர்.

> "பணிந்தவர் அருவினை பற்றறுத் தருள்செயத்
> துணிந்தவன் தோலொடு நூல் துதை மார்பினில்
> பிணிந்தவன் அரவொடு பேரெழிலாமை கொண்
> டணிந்தவன் வளநகர் அந்தண் ஐயாறே"

என்பதும் பிறவுமாகிய திருப்பாட்டுக்கள் இவ்வுண்மையை நிலைநிறுவுகின்றன. (தொடரும்.)

உ

கலைச்சொற்கள்

திரு. T. S. வேலாயுதம்பிள்ளை அவர்கள் B.A., L.T.,
தலைமை ஆசிரியர், உரத்தநாடு

பொது அறிவியல்

(முற்றொடர்ச்சி துணர் 15, மலர் 9, பக்கம் 364)

Ice cream பனிப்பாலேடு
Impact மோதல்
Implement (துணைக்) கருவி
Inarticulate விளங்கப்பேசா
Inductive method பொதுவிதிகாண் [முறை
Infinitesimal இம்மி, சில்லி
Ink filler மைநிறப்பி
Inoculation உள்விதைப்பு
Insanitary நோய்நிலைய
Invar பெருகாக்கலவை
Interval இடைப்போழ்து
Inversion தலைகீழாக்கல்
Investigation ஆய்வு
Ironing பெட்டிபோடல், சூட்டுத் [தேய்ப்பு
Ironing box தேய்ப்புப்பெட்டி
Irridiscence பன்னிறங்காட்டல்
Jacana அல்லிக்கோழி
Jelly உரைசத்து
Kangaroo கங்காரு
Kestrel வல்லூறு
Ketones காரிகள்
Kettle கொதிகலம்
King fisher சிச்சிலி
King fisher (pied) (பொரி) மீன் [கொத்தி
Koil அக்காக்குருவி
Labyrinth (Ear) சிக்குவளை
Lacquer அரக்கு
Lapwing ஆட்காட்டி, (பறவை)

Laryngoscope குரல்வளை காட்டி
Lateral inversion பக்கமாற்றம், [பக்கப்புரட்சி
Layer படை, படலம்
Leakage ஒழுக்கு
Leclanche cell இலக்கிலன் சுக்கலம்
Lemonade எலுமிச்சநீர்
Lemur மனிதக்குரங்கு
Leyden jar இலெய்டன்சால்
License விடுவுச்சீட்டு, விடுகை
Life belt உயிர்க்கச்சை
Lift ஏற்றுபொறி
Lightning conductor மின்னலிகைப் [பான்
Light year ஒளியாண்டு
Lime light சுண்ணச்சுடர்
Line wire வழிக்கம்பி
Linseed oil ஆளிநெய்
Liquor ammonia நவச்சியக்கரையம்
Locomotion இடப்பெயர்ச்சி
Locomotive இடம் பெயர், இடம் [பெயரி
Lodestone காந்தக்கல்
Loosen தளர்த்து
Loudness உரப்பு
Lubricant synovia மூட்டுவழுப்பி
Lupus தோல்கட்டி
Magde burg hemi spheres மாக்டி [பர்க்கு அரைக்கோளங்கள்
Magnify பெருகச்செய், பெரிதாக்கு

Make and break முடித்திற
Malic Acid கனியக்காடி
Malonic Acid கனியகக்காடி
Mammal பாலுணி, பாலூட்டி
Manhood மனிதப்பருவம்
Mantis தொழுங்கிளி
Mantle வலையங்கி
Manufacturer செய் தொழிலாளி
Match stick தீக்குச்சி
Material அடிப்பொருள், முதற்கருவி
Maternity தாய்மை
Maxillae மேல்தாடை (எலும்பு)
Maximum and Minimum Thermometer மீவுயர்தாழ் அனற்பதனி
Mechanic கை(வேலை) யாளி
Megaphone ஒலிபரப்பி
Mesolythic நடுக்கற்காலத்திய
Meteor வீழ்மீன்
Meteorite வீழ்மீன்கல்
Methane அவ்வினி. (ஓரினி)
Method வழிமுறை
Methyle அவ்வயில்
Methyle amine அவ்வயில் நவனி
Methyl di-amine ஈரவ்வயில் நவனி
Methyl tri-amine மூவ்வயில் நவனி
Micro-organism நுண்ணுயிரி
Migratory நாடுமாறு
Mineral Salt நிலவுப்பு
Money purse பணப்பை
Monoplane ஒருதட்டூர்தி
Moor hen சம்பங்கோழி
Mortar (சுண்ணச்) சாந்து
Motion, Curvilinear வட்டவழி [யியக்கம்
Motion, instantaneous (அந்) [நொடியியக்கம்
Motion, Rotary தற்சுழலியக்கம்
Motion, Vibratory அதிரியக்கம்
Motor byke (தான்) செல்லுருளி
Motor Car (தான்) செல்வண்டி
Motor bus (தான்) செல்ஊர்தி
Mould வார்ப்பச்சு
Mouth Organ வாய்க்கின்னரம்
Movie நடிவினை
Moving pictures நடிப்படம்
Munia கம்பச்சிட்டு, பச்சா
Naphtha பற்றுநெய்
Naphthalene balls வெள்ளுண்டை
Naturalist இயல்நூலோன்,இயலாளன்
Natural Perception இயற்கை உள்ள [றிதல்
Nature இயற்கை
Nautics கடலோடுகலை, நாவாயியல்
Negative (Photo) எதிர்(ப்படம்)
Net நிகர, தேறின
Nichrome நிகலகுருமியக்கலவை
Night-heron வக்கா
Night-jar கப்பக்காடை
Nitro glycerine காலகக்கரி நீர்ப்பாகு
Non-vegetarian ஊனுண்பவை
Numismatics காசியல்
Numismatist காசாய்வோன்
Nurture வளர்ப்பு
Oak சிந்தூரமரம்
Object (செயப்படு)பொருள்
Observation தோற்றப்பாடு
Octane எட்டினி
Old-age கிழட்டுப்பருவம்
Off (current) தவிர்
On (current) இணை
Olefines நெய்மங்கள்
Opera glasses அரங்குநோக்கி
Opposum ஆப்பசம், வால்முறுக்கி
Opthalmoscope கண்காட்டி
Optophone ஒளி யொலியாக்கி
Organisation முறைசெயற்பாடு, [முறைச்செயலுடையி
Organise முறைசெய்
Oprey கடற்பருந்து, கடலுராய்ஞ்சி,
Ovaltine ஓவல்டின் [விராலடிப்பான்
Owl ஆந்தை
Owlet கூகை
Oxy-acetelene flame தீய ஈரிலினிச் [சுடர்

Oxyhydrogen flame தீய நீரச்சுடர்
Pack அடுக்கி நிறப்பு
Paint (N) நிறநெய், நிறப்பூச்சு
(V) நிறம்பூசு
Palaeolithic age பழங்கற்காலம்
Palaeontology பழவென்பு நூல்
Palaeography பழவெழுத்தாய்வு
Palm oil பனை நெய்
Panjolin எறும்புதின்னி
Para பத்தி.
Parallel connection ஒரு போகு [இணைப்பு
Paraquet பசுங்கிளி அஞ்சுகம்
Particular குறிப்பிட்ட,அதற்கேயுள்ள
Peacock ஆண்மயில்
Peafowl மயில்
Peahen பெண்மயில்
Peculiarity தனிப்பண்பு
Pelican கூழைக்கிடா
Pentane ஐயினி
Perception உள்ளறிதல்
Percussion Instruments தோல் [வாத்தியங்கள்
Period குறிப்போழ்து
Periscope சுற்றுக்காட்டி.
Persistence of vision தோற்றத் [தொடர்பு
Petal, Keel தோணி அல்லி
,, Standard கொடி அல்லி
,, Wing சிறகல்லி
Petrol பற்று நீர்
Petroleum பாறைநெய்
Petromax light பற்றுவிவிளக்கு
Phalange விரலெலும்பு
Phase பிறை, மாறுநிலை
Philology மொழியியல், சொல்லியல்
Philosophy அடி (ப்படை) யியல், [தத்துவ நூல்
,, Natural இயற்கை அடி [யியல்
Photoelectric cell ஒளி மின்கலம்
Photosphere ஒளிர் மண்டலம்
Phrenology மண்டையியல்

Physiognomy உடல் வெட்டியல்
Piano கின்னரி, கின்னரப்பெட்டி
Pigeon புறு
Pigment நிறமி
Pie சினை ரொட்டி
Pine தேவதாரு
Pinna புறச்செவி
Pitta பச்சைக்காடை
Pitvitary சளி சுரக்கும்
Planet கோள்
Pleurisy நுரையீரலுறை வேக்காடு
Plier கம்பி வெட்டி
Plover உப்புக்கோழி
Plug தக்கை
Plug socket தக்கைச்சுரை
Plywood வச்சிரமரம்
Pneumatic காற்றடை
Pneumatics வாயுவியல்
Pneumatic tyre காற்றடைக்கட்டு
Pneumatophores (நீர்விலங்கின்) [காற்றடைபகுதி
Pole star துருவ நட்சத்திரம்
Pond heron மடையான்
Popular Science எளிதறியியல் நூல்
Positive copy நேர்படி
Posture இருக்கை, நிலை
Power மைந்து, திறன்
Power arm தாக்குங்கை
Power light திறன்விளக்கு
Pratical Scienceசெய்முறையியல் நூல்
Preservative காக்கும் பொருள்
Press அமுக்கி, அச்சு நிலையம்
Pressure Cooker அமுக்கச் சமைப் [பான்
Primary Cell மூலக்கலம்
Projecting lantern எறி விளக்கு
Pro-leg பற்றுகால்
Propane உவ்வினி (மூவினி)
Propeller தள்ளு (தண்டு அல்லது [வட்டு)
Propyle உவ்வயில்
Propylene மூவயிலினி

Pudding கொழுக்கட்டை
Pulp சதைப்பற்று, தாட்கூழ்
Pump இறைப்பான்
Pumping Station இறை(க்கு)நிலையம்
Purifier தூயதாக்கி
Pyrometer தீயனவியளவி
Quail, Bustard குறுங்காடை
Quail, Button மணிக்காடை
Quick sand உழைமணல்
Quill இறகு
Railings கிராதிச் சட்டங்கள்
Rancid காரலான
Rarify நொய்தாக்கு
Raw silk கச்சாப்பட்டு
Rebound எதிர் எழும்பு
Reeds கட்டைகள் அதிர்ஒலினி
Reeling சுருட்டல்
Re-inforced Concrete இருப்பகச்சல்லி
Remains எஞ்சல்கள்
Research மறுதேட்டு
Response எதிர்ப்பாடு
Result பயன்பாடு
Retardation விசைகுறை வீதம்
Reticulum அசைவலைப்பை
Revolving shutter சுழல் மூடி
Rickets என்பிளக்கி (நோய்)
Rickshaw ஆள்வண்டி
Robin (black-backed) குண்டுக் [கரிச்சான்
Robin (Magpie) வண்ணாத்திக்குருவி
Royal-jelly அரச அல்வா
Rudder சுக்கான்
Rudder, Horizontal மட்டச்சுக்கான்
Rudder, Vertical குத்துச்சுக்கான்
Rumen அசை முதற்பை
Sac சிற்றறை
Sac-charine, Di இருமைச்சர்க்கரதை
Sac-charine, Mono ஒருமை ,,
Sac-charine, Poly பன்மை ,,
Sac-charines சர்க்கரதைகள்
Safety match காப்புத்தீக்குச்சி
Safety pin காப்பூசி

Sample மாதிரி
Sand grouse கற்கவுதாரி
Sand paper உப்புத்தாள்
Sand piper தவிட்டு உல்லான்
Sanitary நல நிலைய
Sanitary Inspector நலங்காணி
Sanitation நலஏற்பாடு
Saphire நீலம், நீலக்கல்
Satellite கோள்சுற்றி
Science அறிவியல், இயல்நூல்
Scientific discoveries அறிவியற் [கண்டுபிடிப்பு
Scientific invention அறிவியற் புது [அமைப்பு
Scientific method அறிவியல் முறை
Scientific research அறிவியல் மறு [தேட்டு
Scientist இயல்வலார்
Scops owl கூகை
Screen தட்டி, நிலைத்தட்டி, திரை
Scrubber வாயு கழுவி
Sea eagle (கடல்) ஆலா
Sealing wax அரக்கு
Search light தேடுவிளக்கு
Secondary Cell வழிக்கலம்
Self evident தானே விளங்கு
Self recorder தானே பதிப்பான்
Sensitive நுண்ணுணர்
Sensitiveness நுண்ணுணர்வு
Separate touch தனி (க்காந்த)த் [தேய்ப்பு
Series connection தொடர் இணைப்பு
Serum அடிநீர்
Sheet தகடு, தாள்
Shelf நிலைத்தட்டு
Short circuit குறுசுற்று
Silk farming பட்டுப்பண்ணை
Simple machine எளிய இயந்திரம்
Single touch ஒருசார் (காந்தத்) [தேய்ப்பு
Sized பசையிடப்பட்ட
Skimmer கடலுராய்ஞ்சி
Slaked நீரூட்டிய, தாளித்த

Sleep movement தூக்க இயக்கம்
Smelling salt முகருப்பு
Snake bird வால் வாங்கி
Soda water உவர்நீர்
Solar system பரிதிக்குடும்பம்
Soldering iron பற்றுக்கோல்
Solenoid மின்சுருட்காந்தம்
Sound box ஒலிப்பெட்டி
Sounding board ஒலிப்பலகை
Southern cross தென் சிலுவை
Specialised knowledge சிறப்பறிவு
Species வகை
Specific அதற்கெனவுள்ள
Sphenoid மண்டையெலும்பு
Spiracles மாமூச்சுப் புரைகள்
Spirit of harts-horn மான்கொம்புச் [சத்து
Spirit-ring-commutator வெட்டு [வளைய நெறிமாற்றி
Spoon-bill துடுப்பு நாரை
Spores பெருகுயிரி
Spotted dove மணிப்புறா
Spray paint தெளிபூச்சு
Squint சாய்பார்வை, ஒன்றரைக்கண்
Stages நிலைகள், அரங்குகள்
Staining சாயம்பூசல், கறையாக்குதல்
Static electricity நிலைமின்சாரம்
Steam chest நீராவிப்பெட்டி
,, dome நீராவிக்கூண்டு
,, engine நீராவிப் பொறி
,, pipe நீராவிக்குழாய்
,, turbine நீராவி செலுத்துருளை
Steamer ஆவிக்கலம்
Stereoscope படத்திண்மைகாட்டி
Stethoscope (அடிப்பு) ஒலிகாட்டி
Stick insect இடைவன்
Stomata இலைமூச்சுப்புரை
Storage சேமியம்
,, cell சேமிப்புக்கலம்
Straw board வைப்பலகை
Strip கீற்று
Sub-family உட்குலம்
Sub-genus உள்ளினம்
,, marine ஆழிமூழ்கி, மூழ்கு கப்பல்
,, order உள்வரிசை
Sucker-feet பற்றுகால்
Sun bird தேன்சிட்டு
,, spot பரிதிப்புள்ளி
Supporter ஆதரிப்பான், ஆதாவு
Surveyor நில அளவாளி
Suture ஓரப்பிணைவு, பிணைகயறு
Swallow அடைக்கலங்குருவி
Swift உழவாரக்குருவி
Syncronisation கால ஒப்புமை
Synthetic process சேர்ப்பு முறை
System இயன்முறை வகுப்பு
Systematic இயன்முறையான
Systematise இயன்முறைப்படுத்து
Table lamp மேசை விளக்கு
Tabular form நிரலீடு
Tabulate நிரலிடு
Tailor bird தையக்குருவி, பொன்சிட்டு
Tail-plane வால்தட்டு
Talkie பேசுபடம், படக்கூத்து
Tank குளம், கொள்கலம்
Tap பிரடை, திருகுதலை
Tartar லுத்தை
Tea தேநீர்
Teat முலைக்காம்பு
Telegraph key தந்திக்கட்டை
Teleology முடிபுக்கோட்பாடு
Temperature, (Degree of) அனலி
Tern ஆலா
Theoretical Science தேற்ற அறிவி [யல்
Thermion சூட்டியன்
Thermo-couple சூட்டிரட்டை
Thermopile அகைப்பளவி
Thermosflask சூட்டுக்குடுவை
Throwing புரியாக்குதல்
Tighten இறுக்கியமாக்கு
Timber மரக்கட்டை
Tinned food புட்டியுணவு
Tone, Fundamental அடியீடானகுரல்

Tool கருவி
Tooth paste பற்பசை
Torch light கைமின்னி
Torpedo வெடிவாளை
Touch-me-not தொட்டாற்சிணுங்கி
Tourniquet குருதிதடுக்கி
Transformer மாற்றுவான்
Transition stage மாறுநிலை
Tree-pie மாங்குயில்
Tricycle மூவுருளி
Tribe இனம்
Trigger அடிதண்டு
Trolley கைவண்டி
Turbine (நீர்) செலுத்துருளை
Turntable சுழல் மேசை
Turtle dove காட்டுப்புறா
Twilight சந்தியொளி
Tyre (உருளைக்) கட்டு
Udder மடி, பாற்பை
Ultraviolet ஊதாவின்மேல், ஊதாவுக் [கப்பால்
Vaccinator அம்மைகுத்தி, குத்துவான்
Vaccine அம்மைப்பால்
Vacuum brake வெட்டைத்தடுப்பு
Vegetable oil பயிர் நெய்
Vehicle ஊர்தி
Veneering பூச்சு, பூச்சிடல்
Ventilator காற்றுவழி
Violin பிடில், வில்யாழ்
Vulcanite கற்பயின்
Vulture கூளி, கலுழன்
Wall-lamp சுவற்று விளக்கு
Water gauge நீரளப்பான்
Water hyacinth வெங்காயத்தாமரை
Wax-pinchers மெழுகுசுரண்டிகள்
Weaver bird தூக்கணங்குருவி
Weapon படைக்கலம்
Weasel காட்டுப்பூனை
Weight arm வினை(புரி) க்கை
Whistle (n) ஊதி, (v) சிட்டியடி
White eye கண்ணுடிக்குருவி
Wind instrument துளைக்கருவி, [துளைவாத்தியம்
Wire instrument கம்பிக்கருவி, கம்பி [வாத்தியம்
Wood spirit மரவெறியை
Wool விலங்கு மயிர்

உ

தமிழ்ச்செய்திகள்

கரந்தைத் தமிழ்ச்சங்கம்:— தொடக்கக் கல்லூரிகளின் (Elementary Schools) பாடதிட்ட முறையில் ஆங்கிலக் கல்வியின் அளவு இன்னதுதான் என சென்னை அரசியலார் வரையறுத்த படி கல்விப் பிரிவின் தலைவர் (Director of Public Instruction, Madras) அவர்களது (R. O. C. 1493—E—34 Dated 23-5-39, R. C. No. 1493—E—34 Dated 8-6-39) உத்தரவுகளில் வெளிவந்திருக்கின்றன.

4-வது வகுப்பில் ஆங்கிலமொழிப் பயிற்சியைத் தொடங்கலாம்; 8-வது வகுப்பு மாணவன் ஆங்கிலக் கல்வியில் 2-வது 'பாரம்' மாணவனுடைய தகுதிக்கு மேற்படலாகாது. தொடக்கப் பள்ளியிலிருந்தோ, வீட்டிலிருந்தோ கல்விபயின்று உயர்தரப்பள்ளியில் (Secondary School) சேரவிரும்பும் மாணவனை 3-வது 'பாரம்' வகுப்பிற்குமேல் சேர்க்க வொண்ணுது என்றவாறு விதிகளைத் திட்டஞ் செய்துள்ளனர்.

இவ்விதிகளால் விளைய விருக்கும் கேடுகள் மிகப் பல. பொதுமக்கள் இவற்றின் விளைவுகளைக் கருத்தில்வைத்து ஆராயாது வாளா இருப்பது இரங்கத்தக்கது.

உயர்தரப் பள்ளிகளின் தலைவர்கள் தொடக்கக் கல்லூரிகளுடன் தாம் போட்டியிட முடிவதில்லையென்றும், தங்கள் வருவாய் குறைந்து தமது பள்ளிகள் வாட்டமுறுகின்றன வென்றும் பலகாலமாய்க் கூக்குரலிட்டு வந்தனர். 'B.A., L.T.' ஆசிரியர்களைக்கொண்டு நடத்தப்பெறும் உயர்தரப்பள்ளியில் பெறலாகும் கல்வியை 'Secondary Grade' ஆசிரியர்களால் நடக்கும் தொடக்கக் கல்லூரியில், குறைந்தசெலவில் ஒருமாணவன் பெறலாகுமெனில், இதனைத் தவிர்த்து இதனினும் பன்மடங்கு மிக்க செலவுசெய்து உயர்தரப் பள்ளியிலேயே அவன் பயிலவேண்டுமென வற்புறுத்துதல் முறையல்லவே.

குறைந்த செலவில் மிகப் பல மாணவர் கல்வி நிரம்புதற்கிருந்த வசதிகளைக் கெடுத்து, உயர்தரப்பள்ளித் தலைவர்களின் கருவூலத்தை நிரப்புவதே கருமம் என அரசியலார் துணிந்தது மாண்பல்லவே!

குறைந்த செலவில், மிக்க கல்வியைப் பெறக்கூடிய கல்வி நிலையத்தை அறிந்து, தமது மக்களை ஆண்டுப் பயிலச்செய்யும் பெற்றோர் உரிமையைப் பறிகொள்ளுவது என்ன முறை?

4-வது 'பார'த்தில் சேரும் தகுதி பெற்ற மாணவனை அவ்வகுப்பில் சேர்க்க ஒண்ணாது என்பது அநீதியல்லவா? பெரும்பாலும் பள்ளிக்கூட வசதியற்ற ஊர்ப்புறங்களில் வதியும் ஏழைமாணவர், ஆங்காங்கு அண்மையிலுள்ள தொடக்கக்கல்லூரிகளிற் பயின்று 3-வது 'பார'த்தின் தகுதி பெறுவதால் விளையும் கேடுதான் என்னை? இதுபோது விதிக்கப் பெற்றுள்ள விதியின்படி தொடக்கக் கல்லூரியில் 4-வது வகுப்பில் ஆங்கிலம் பயிலத் தொடங்கி 8-வது வகுப்பில் 2-வது பாரத்தின் ஆங்கிலப் பயிற்சி தான் அடையலாம் எனக் குறிக்கப்படுகிறது. எட்டுஆண்டுகள் பயின்ற பின்னரும் 2-வது 'பார'த்துக்குமேல் தம்மை சேர்க்க மாட்டார்கள் எனத் தெரிந்துவைத்தவர்கள், 5-வது வகுப்புக்கு மேல் மாணவரைத் தொடக்கக் கல்லூரியில் இருக்கச் செய்யார்; உயர்தரப் பள்ளிகளிலே கொண்டுய்ப்பர். அதற்கு வழியற்ற ஏழைகள் குன்றுமுட்டிய குரீஇப்போல கல்வியில் உயராது, ஒன்றுக்குமாகாத 5-வது வகுப்பில் பெறும் போலிப்படிப்புடன் வீடுசென்று, கற்ற சிலவற்றையும் மறந்து, கல்லா மாக்களாய்க் காலங்கழிப்பர்.

மக்களின் கல்விநிலையைப் பாழ்படுத்தும்பெற்றிமையுடைய இவ்விதிகளை அறவே ஒழித்து, இதுவரை இருந்துவந்த விதிகளையே ஆட்சியில் கொள்ளுதல் இன்றியமையாதது.

இக்கருத்துக்களை விளக்கிக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார் 27-1-40 தேதியில் சிலமுடிபுகள் செய்து அரசியலாருக்கும் கல்வித் தலைவர் அவர்கட்கும் அனுப்பியிருக்கின்றனர். நாடெங்கும் கிளர்ச்சிசெய்து ஆவனபுரிதல் அறிவுடையோர் கடன்.

ஓர் மகிழ்ச்சி:—கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் ஆயுள்உறுப்பினராயிருந்து, சங்கத்தின் தமிழ்த்தொண்டுகளைப் பல்லாற்றானும் ஊக்கிவரும் திருவாளர், **Sir. A. T. பன்னீர்ச்செல்வம்** அவர்கள் இந்தியா மந்திரியார் அவர்களின் அமைச்சர் பதவியை எய்தியதுபற்றித் தமிழ்நாடு கழிபேருவகை யடைகின்றது.

தஞ்சை நாட்டாண்மைக்கழகத்தின் தலைமையை ஏற்றவுடன் தமிழ்மொழியின் வளர்ச்சியையும், தமிழ் மக்களின் ஆக்கத்தையும் பேணிவளர்த்தனர். திருவையாற்று அரசர் கல்லூரியில் தமிழ்ப்பிரிவை வலனுறச் செய்தது தமிழ்மக்கள்

நன்றியுடன் போற்றுதற்குரிய நல்லறம். தமிழ்மாணவர் கல்வியில் உயரும் பொருட்டு மாணவர் இல்லங்களில் பெருந்தொகையினரைச் சேர்த்து ஊக்கினர். தகுதிபெற்ற தமிழ் மக்கள் வாழ்க்கைக்கு வழிகாணுது ஏக்குற்று நின்ற பலரைத் தக்க பதவிகளில் அமர்த்தி வாழ்வித்தனர். இதுபோது தமிழரியக்கத்தின் தலைநின்று, தமிழர் நாகரிகத்தின் ஒப்புயர்வற்ற தனிச்சிறப்புகளை விளக்கி, 'தமிழ்நாடு தமிழர்க்கே' எனும் போர்முரசை முழக்கி வருகின்றனர்.

தமிழ் மக்களின் வாழ்வே தனது வாழ்வு எனும் குறிக்கோளில் உறைத்து நின்று தொண்டுபுரியும் பெரியாரை, இந்திய மந்திரியார் தேடிப்பணிகொண்டது, துரைத்தனத்தாரின் அறிவுடைமையை நன்கு தெரிவிக்கின்றது. அறியாமை, வறுமை ஆதிய கேடுகளால், செய்வது, தவிர்வது அறியாது தடுமாற்றமுறும் ஏழை மக்கள் அரசியற் சூழ்ச்சிகளில் அகப்பட்டு அல்லற்படுவதையும், நாட்டின் உண்மை நிலையினையும் நன்கு தெரிந்த அன்பர், திரு. **பன்னீர்ச்செல்வம்** அவர்கள் இந்திய மந்திரியாரின் அணுக்கராயிருக்க நேர்ந்தது, நாடு செய்த தவப்பயனாகும்.

புத்தக மதிப்புரை

படியாதவர் படும்பாடு:—இது திருநெல்வேலித்தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப்பெற்ற நல்லநூல். இதன்விலை அணு 6. நல்லதாளில், பொருள் விளங்கும் படங்களுடன் கவின்பெற இயற்றப்பெற்றுளது.

கல்லாமையுள் ஆழ்ந்து, இழிநிலைப்பட்டுழலும் தமிழ் நாட்டைக் கல்வியில் ஊக்கும் கருத்துடன், இந்நூல் இயற்றப்பெற்றிருக்கின்றது. கல்வியில்லாத மக்கள், செல்வம் முதலியவற்றால் பெருமை பாராட்டுவராயினும், வாழ்க்கையை நடத்த வழியறியாது எண்ணுக்கடங்காத நெறிகளில் இடர்ப்பட்டுத் துன்புறுகின்றனர். சிற்றுயிர்க்கு உற்றதுணை கல்வியேயன்றிப் பிறிதில்லை எனும் உண்மை, மனதில் உறைக்குமாறு, சிறுகதைகளால் நன்கு விளக்கப்பெற்றுளது. சுவைமல்கிய பாடல்களும் நூலை அணிசெய்கின்றன.

தமிழ்மக்கள் இந்நூலைப் படித்துப் பயன் கொள்ளலாகும்.

சிலம்புச்செல்வம் :- இது திருவாளர் சுத்தானந்தபாரதியார் அவர்கள் இயற்றியது. இராமச்சந்திரபுரம் அன்புநிலையத்தார் வெளியிட்டது. விலை ரூபா 1—12—0.

செஞ்சொற் கவியின்பம் மலிய, நல்ல தமிழ் நடையில், இயற்றப் பெற்றுளது. சிலப்பதிகாரத்தைப் படித்தற்கான புலமையில்லாதவர் அதன் சுவைகளை அறிந்து இன்புறற்கேற்ற வாறு மூலநூலை அடிபொற்றிச் செல்கின்றது. தமிழ்நலங் கனியும் இந்நூலைத் தமிழறியும் நன்மக்கள் ஒவ்வொருவரும் படித்துப்பயன் கொள்ளற்பாலர்.

பகவற்கீதை :— கண்ணன் வாய்மொழியாகிய வடமொழி நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு வடமொழிச் சுலோகம் ஒவ்வொன்றனையும் தமிழில் மொழிபெயர்த்து, எளிய செய்யுள் வடிவில் இயற்றப்பெற்றது.

மூலநூலின் கருத்து சிதையாதும், தத்துவப்பொருள் எளிதே விளங்குமாறும் மொழிபெயர்த்தது போற்றுதற்கான அருஞ்செயல். தமிழ்ப் புலமை நிரம்பாதவரும் கற்றுப் பயனடைய வேண்டுமெனும் ஆசிரியரின் பெருநோக்கு நிறைவேறு மாறு நூலின் யாப்பு அமைந்துளது.

இவ்வரிய நூலை இயற்றித் தமிழுலகிற்கு உதவிய நூலாசிரியர் சேலம் கல்லூரித்தலைவர் திருவாளர். A. இராமசாமிக்கவுண்டர் M. A., L. T. அவர்களாவர்.

நன்கொடைகள்

புலவர் கல்லூரிக்கு

சங்க உறுப்பினர்			10	0	0
திரு. T. S. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள்		(கோவை)	30	0	0
,, P. U. J. முனிசாமிசெட்டியார்	,,	(நாகை)	25	0	0
,, குழந்தைஉடையார்	,,	,,	5	0	0
,, கதிர்வேல் பிள்ளை	,,	(தஞ்சை)	5	0	0
,, சங்கத்தலைவர்	,,	(காந்தை)	4	0	0

வெளிவருகிறது! வெளிவருகிறது!

பல்லாண்டுகளாகத் தமிழறிஞர் ஆவலாய் எதிர்பார்த்த

ஓர் அருந்தமிழ் ஆராய்ச்சிநூல்!

தமிழ்மொழி, தமிழர் நாகரிகம், கலை முதலியவை ஆரியங் கலவாத தனிச் சிறப்புடையனவென்று எவரும் மறுக்கொணாத வாறு, இலக்கியம், சரித்திரம், மொழிநூல் என்ற மூவகைச் சான்றுகளால் நிறுவி, பண்டித புலவ வித்துவான் கீழ்க் கலைத் தேர்ச்சியாளன் ஞா. தேவநேசனால் பத்தாண் டாராய்ச்சியின் பயனாக எழுதப்பெற்றது. தமிழர்க்கு ஓர் புத்துணர்ச்சி யையும், தமிழ் நாட்டில் ஓர் புதுக்கிளர்ச்சியையும் உண்டுபண் ணித் தமிழைத் தலைமையாக்குவது. கிரௌண் 1 × 8 அளவில் 300 பக்கம்போற் கொள்வது.

விலை உருபா (ரூபாய்) 3. சிலபடிகளே அச்சிடப் படுகின் றன. முன்பணமாய் அனுப்புவோர்க்குக் குறைந்த விலை 2 உருபா. வேண்டுவோர் திருச்சிப் பெரியகடைவீதி ஸ்ரீநிலையம் அச்சுக்கூடத்திற்கு முழுப்பணத்தையும் அனுப்பிப்பதிவுசெய்து கொள்க.

தமிழ் வளர்ச்சி கருதிப் பத்து உருபாவுக்குக் குறையாது முன்பணமா யனுப்புவோரின் பெயர், புத்தகமுகத்திற்கொடை யாளர் பெயர்வரிசையிற் குறிக்கப்படும். ஐம்பது உருபா அனுப்பின் பெயருடன் உருவப் படமும் பொறிக்கப்படும். புத்தகப் பதிப்புச் செலவு முழுமையும் ஏற்றுக்கொள்பவர்க்கு உருவப்படம் பொறிக்கப் படுவதுடன் புத்தகமும் படைக்கப் படும்.

புத்தகம் இன்னும் ஒரு மாதத்தில் வெளிவரும்.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.